# செந்தமிழ்ச் செல்வி

20.5.74

## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| கழகம் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புப் பணி | ௪௫௭ |
| உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள் | ௪௬௪ |
| ஆப்பிரிக்கச் சுற்றுலா | ௪௭௫ |
| தமிழும் மலையாளமும் | ௪௮௬ |
| பிளெய்னியின் 'தென்னிந்தியா' | ௪௯௧ |
| பள்ளித் தமிழாசிரியர்கட்குக் கழக ஆட்சியாளர் வேண்டுகோள் | ௪௯௪ |
| தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலிக்குத் தனித்துறை | ௪௯௬ |
| கழக ஆட்சிக் குழு உறுப்பினர் வித்துவான் வே. மாணிக்கவாசகம் பிள்ளை மறைவு | ௪௯௯ |
| டாக்டர் இலட்சுமணசுவாமி முதலியார் மறைவு | ௫௦௦ |
| செய்திகளும் குறிப்புகளும் | ௫௦௧ |


சிலம்பு-௪௮] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௫, சித்திரை (May '74) [பரல்-௯

# 'செந்தமிழ்ச் செல்வி'

## இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

க. டாக்டர் ந. சஞ்சீவி, எம். ஏ., பி.எச்டி.
தமிழ்த்துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்

உ. 'சித்தாந்த கலாநிதி', உரைவேந்தர்,
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், மதுரை.

ங. திரு. கொண்டல், சு. மகாதேவன் அவர்கள், எம். ஏ., பி. எஸ்ஸி.
இயக்குநர், தமிழகவரசு தமிழ் வளர்ச்சித்துறை.

ச. செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., டிப். லிட்.
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

ரு. செந்தமிழ்க் கலைமணி, வித்துவான்,
பண்டித, கா. பொ. இரத்தினம் அவர்கள்,
பி.ஏ. (ஆனர்சு), (லண்டன்) எம்.ஏ., பி.ஓ.எல். (சென்னை)
கொழும்பு.

சு. புலவர் இரா. இளங்குமரன்,
திருநகர், மதுரை-6.

எ. திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.
நூலகர், மறைமலையடிகள் நூல்நிலையம், சென்னை.

---

## கழக வழி வெளிவந்துள்ள வாழ்க்கை வரலாற்று நூல்கள்

| | | |
|---|---|---|
| சங்ககால அரசர் வரிசை (இரண்டு பகுதிகள்) தனித்தனி | 6 | 25 |
| சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை (ஆறு பகுதிகள்) தனித்தனி | 6 | 25 |
| தமிழ்ப் புலவர் வரிசை (10பகுதிகள்) தனித்தனி | 6 | 25 |
| தமிழ்ப் புலவர் அகரவரிசை (தொகுதி - க) 1595 புலவர்கள்(மூன்று பகுதிகள்) தனித்தனி | 6 | 25 |
| தமிழ்ப் புலவர் அகரவரிசை (தொகுதி - உ) (மூன்று பகுதிகள்) தனித்தனி | 6 | 25 |
| நெல்லைத் தமிழ்ப் புலவர்கள் (I, II) தனித்தனி | 6 | 25 |
| தமிழ் நாவலர் சரிதை (ஆராய்ச்சி நூல்) | 6 | 00 |
| அகத்தியர் வரலாறு —அ. சிதம்பரனார் | 2 | 50 |
| தமிழ்ப் பெரும்புலவர் அறுவர் | 6 | 00 |
| தமிழ்ப் பெரும்புலவர் மூவர் | 6 | 00 |
| பெருங்கதை மகளிர் —பெருமழைப் புலவர் | 2 | 50 |
| விபுலானந்த அடிகள் | 3 | 00 |
| கவிக்குயில் பாரதியார் | 5 | 50 |
| யான்கண்ட புலவர்கள் —பம்மல் சம்பந்த முதலியார் | 1 | 50 |
| தமிழ்ப் பேரறிஞர் பா. வே. மாணிக்க நாய்க்கர் வரலாறு | 3 | 00 |

# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௪௮ | திருவள்ளுவா ஆண்டு உ௦௦ரு, சித்திரை மே 1974 | பரல் ௯


## கழகம் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புப் பணி

(முன் பரல் ௪௧௪-ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் தமிழக அமைச்சராக விருந்த டாக்டர் டி. எஸ். எஸ். இராசன் அவர்கள் 1947 இல் தம் வரலாற்றை 'நினைவு அலைகள்' என்ற தலைப்பில் 400 பக்க அளவில் உரை நடையில் எழுதியுள்ளனர். அதன்கண் தமது குழந்தைப் பருவமுதல் இராஜாஜி 1937 இல் முதன்முதல் சென்னையில் அமைத்த அமைச்சரவையிலிருந்து தாம் விலகிய காலம்வரை விளக்கியுள்ளனர். அதற்குத் திரு. கல்கி அவர்கள் எழுதிய முன்னுரை போற்றுதற்குரியது.

தமிழகத்திலே முதன்முதல் வரையப்பட்ட 'தன் வரலாற்றுத் துறை (autobiography) நூல், வண்ணச்சரபம் முருகதாச சுவாமிகள் என வழங்கும அருள்மிகு தண்டபாணி அடிகளது அநுபவ விளக்கம் என்னும் 'குருபரதத்துவ நூல்' என்பதாகும். 'அது 29 சருக்கங்களைக் கொண்டதாய் 1240 செய்யுட்களால் இயன்றது.

இந்நூல் இறுதியில் அடிகள் பாடிச் சேர்த்திருக்கும் அடியிற்கண்ட அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தப் பாக்கள் மூன்றினால் இந்நூலை இயற்றியதன் வரலாறும் பயனும் காலமும் அறியப்பெறுகின்றன.

### நடந்தவை கூறி, நடப்பவை கூறவிழைதல்

*தேக்கியசெந் தமிழ்க்கவிஆ யிரத்திருநூற்*
*றொருநாற்பான் திகழ இந்நூல்*
*ஆக்கியஎன் அநுபவமும் சரிதமும் சிற்*
*சிலவிளம்பும் அமல மூர்த்தி*
*சாக்கிரத்தில் வந்தருளப் பெற்றபின்உண்*
*டாவனவும் தமிழாற் பாடும்*
*பாக்கியமுற் றுய்வதென்றோ? அறிகிலேன்*
*அலைகடல்சூழ் பாருள் ளோரே.*

### இந்நூல்தரும் பயன் இதுவெனல்

*பெத்தருக்கும் முத்தருக்கும் இந்த நூல்*
*இனிக்காது பேறில் லாரென்*
*றித்தரையோர் சொல்லிடநெஞ் சறிந்தவநு*
*பூதிபெற்றோர்க் கினிப்பு நல்கும்*
*பொய்த்தவர்க்கும் சுவையறியாப் புலவருக்கும்*
*காஞ்சிரங்காய் போலக் கைக்கும்*
*சித்தர்புகழ் சீர்பெறுமுன் திருத்திவந்து*
*கெடுக்காமல் செறுக்கும் அன்றே.*

### காலமும் நூலின் பெயரும் கழறல்

*தாவில்கலி யுகத்தாண்டை யாயிரத்துட்*
*பதினெழு தள்ளித் தோன்றும்*
*மாவிசுவிற் புரட்டாசித் திங்கள்பத்தாம்*
*தேதி திர வாரத் தத்தம்*
*மேவியநாள் வேதாந்த சித்தாந்த*
*சமரசமே விளக்கும் மார்க்கம்*
*மூவிரண்டும் களிகூறும் குருபரதத்*
*துவத்திரு நூல் முடித்திட் டேனே"*

வண்ணச் சரபம் தண்டபாணி அடிகளுக்குத் தந்தையார் இட்டபெயர் சங்கரலிங்கம். திருநெல்வேலித் திருநகரில் சைவவேளாள மரபில் தோன்றியவர். இளமையிலேயே முருகன் திருவருள் கைகூடியவர். ஐந்திலக்கணத்துக்கு மேல் புலமை இலக்கணம் பாடிச்சேர்த்து 'அறுவகையிலக்கணம்' இயற்றிய இலக்கணப் பேரறிஞராவர். பல்வகைப் பாவினங் களில் அறுநூறுக்கு மேற்பட்ட நூல்களை இயற்றியருளியவராவர். அவர்கள் பாடிய பெருநூல்களில் புலவர் புராணம், தில்லைத் திருவாயிரம், திருவரங்கத்திருவாயிரம், பழனித் திருவாயிரம்

ஆகிய நான்கும் குறிப்பிடத்தக்கன. தங் கைப்படவே ஓலைகளில் முத்துப்போல் 50,000 க்கு மேற்பட்ட பாடல்களைத் தாமே பாடி எழுதிய பேரருளாளராவர். அவர்கள் பல தெய்வங்களைப் பற்றிப் பாடிய பதிகங்களும் நூல்களும் 740 வரையாகும். தமிழகத்தில் பல ஊர்கட்கும், இலங்கை, திருவனந்தபுரம் முதலிய நாடுகட்கும் சென்று பாடியுள்ளார். அவர்கள் நூல்களும் சுவடிகளும் வரலாற்றுக் குறிப்புகளும் 1967 மார்ச்சுத் திங்களில் நெல்லையப்பர் திருககோயிலில் அவர்களை நினைவுகூர்தற பொருட்டு நடைபெற்ற விழாவிலே காட்சியாக அமைக்கப் பெற்றன. செல்வி சிலம்பு 41. பரல் 7 இல் விவரங் காண்க.

1-6-1966 இல் 'குருபரதத்துவ நூல்' முப்பெருஞ்செல்வப் பெண்மணிகளின் பொருளுதவியினால் அச்சிடப் பெற்று சிரவணபுரம் கௌமாரமடம் தண்டபாணி மூர்த்தி திருக கோயில் திருக்குடமுழுக்கு விழாவிலே அப்போதைய அறநிலையத் துறை ஆணையர் உயர்திரு எம். எஸ். சாரங்கபாணி முதலியாரவர்களால் வெளியிடப்பெற்றது.

வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள் எளிதிலே சந்தப் பாடல்களைப் பாடுபவராதலால் திருப்புகழ்ச் சுவாமிகள் எனவும், முருகதாச சுவாமிகள் எனவும் அழைக்கப்பெற்றனர்.

அவர்களுடைய திருமகனார் செந்தில்நாயகம் பிள்ளையவர்களும், பெயரர் செ. முருகதாசர் அவர்களும் செந்தமிழிலும் சைவசமயத்திலும் நிரம்பிய புலமையுடையவர்களாவர். பல வகைப் பாவினங்களில் செய்யுளியற்றுந் திறமை படைத்தவர்களுமாவர். இருவரும் துறவிகள். அருள்மிகு செந்தில்நாயக அடிகள் திருவாமாத்தூர் கௌமார மடாலயத் தோட்டத்தில் சமாதி கொண்டுள்ளார்.

திரு முருகதாச ஐயா அவர்களின் திருமகனார் திருவளர் செல்வர் தி. மு. சங்கரலிங்கனார் தம் பூட்டனார் திருப்பெயரைப் பூண்டிருப்பதோடு புலவர் பட்டம் பெற்று விழுப்புரத்தில நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றுகின்றனர். செய்யுளியற்றுந் திறனுமுடையவர். கௌமார மடாலயத்தைத் தம் சிற்றப்பாவோடு சிறப்புற நடத்துவதில தந் தவத்தந்தையார்க்கு அருந்துணை புரிந்து வருகின்றனர்.

கப்பலோட்டிய விடுதலைக்குழைத்த மாபெரும் வீரர் சிதம்பரனார் கொழுந்தி மகன் திரு. நடராசனுககுத் திரு. முருகதாச ஐயா அவர்களுடைய திருமகள் யான் விரும்பியபடி திருமணஞ் செய்விக்கப் பெற்றாள். மேலே குறிப்பிட்ட செல்வன் நடராசன் என் மனைவியின் தாய்கூடப் பிறந்த சிற்றன்னையின்

முகள் வயிற்றுப் பிள்ளையாவான். எனவே, திரு. வ. உ. சி. அவர்கள் எனக்கு அண்ணனாராகவும் திரு. முருகதாச ஐயா அவர்கள் எனக்கு மைத்துனராகவும் அமைந்துள்ளனர் என்பதை மிக்க மகிழ்வோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

### தண்டபாணி விஜயம்

வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள் தமது வரலாற்றைச் செய்யுள் வடிவில் தாமே இயற்றியுள்ளனர் என்பதறிந்தோம். அவர்கள் திருமகனாரும் மாணாக்கருமான தவத்திரு செந்தில் நாயக அடிகள் தந் தவத்தந்தையாரவர்களின் திருமிகு வரலாற்றைச் செய்யுள் வடிவில் 'தண்டபாணி விஜயம்' என்ற பெயரில் பூருவபாகம், உத்தரபாகம் என்ற இரு பிரிவுகளில் 108 தலைப்புக்களில் 546 செய்யுட்களைக் கொண்டதாய் இயற்றியுள்ளனர். அது சென்னையில் உருத்ரோத்காரி (1923) வைகாசித் திங்களில் அச்சிடப் பெற்றுள்ளது.

அருள்மிகு தண்டபாணி அடிகள் புலமை ஓரளவு தம் பூட்டன் வரை தொடர்ந்து வருவதும் அடிகள் தங் கைப்பட எழுதிய ஏட்டுச் சுவடிகள் யாவும் திருவாமாத்தூர் கௌமார மடத்திலே பேணிக் காத்து வைக்கப்பெற்றிருப்பதும், புலமையுடைய பேரனும் பூட்டனும் அவற்றைப் பெயர்த்தெழுதி ஒவ்வொன்றாக அச்சிட்டு வெளிவருவதற்குத் துணைபுரிந்து வருவதும் திருமுருகன் திருவருட் செயலென எண்ணி மகிழ்வோம்.

வண்ணச் சரபம் தண்டபாணி அடிகளின் குருபர தத்துவத்தை எண்ணி மகிழும் அதே பொழுதில்,

"எனைனெதிர் எழுந்து
தேவந்திகைமேல் திகழ்ந்து தோன்றி
... ... .... . . ... ... ...
என்திறம் உரைத்த இமையோர் இளங்கொடி"

என்று தம் வரலாற்றைக் கண்ணகியார் வாக்காக உரைத்து அக்கண்ணகியார் திறம் கேட்டவர்கள் மல்லல் மா ஞாலத்து வாழும் முறைமையைத் தொகுத்துரைத்த இளங்கோவடிகளாரின் இனிய சீர்மை இறும்பூது பயப்பதாம்.

அரசு அமைத்திருக்கும் சுற்றுலாத் துறையினர் திருவாமாத்தூர் கௌமார மடத்தையும் கவின்மிக்க காட்சிக்கூடங்களில் ஒன்றாகச் சேர்க்கவேண்டுவது மிகவும் முதன்மையாகும்.

பல துறைகளிலுள்ள பெருமக்கள் தங்கள் வரலாறுகளைக் கட்டாயமாக எழுதுதல் வேண்டும் என்பது பற்றி முன்னரும் கூறியுள்ளேன். அதற்கு எடுத்துக்காட்டாகப் பம்பாய்

மாநிலத்து நீதிமன்ற முன்னுள் தலைமை நடுவரும், இந்திய அரசு முன்னுள் கல்வி அமைச்சருமான மாண்புமிகு எம். சி. சாக்ளா அவர்கள் 'தன் வரலாறு' எழுதுவதின் இன்றியமையாமையைப்பற்றி அண்மையில் தம்முடைய தன் வரலாற்றை 'Roses in December' என்ற தலைப்பில் நூலாக எழுதியுள்ளதில் 'ஏன் ஒரு தன்வரலாறு' (Why an Autobiography) என்ற முதல் அதிகாரத்தில் சுருக்கமாக, ஆனால் சுவைபட எழுதியுள்ளார். அவர் பம்பாய் மாநிலத் தலைமை நீதிபதியாகவும் இருந்தவர். அதனால் தம் வாதங்களை வழக்கறிஞருக்குரிய வாதத்திறமையோடு நம் முன் வைத்துள்ளார். அந் நூலை அவர் மிகச் சுவைபட எழுதியுள்ளதால் அதன் முதல் பதிப்பு வெளிவந்த 1973ஆம் ஆண்டிலேயே முழுவதும் விற்றுவிட்டது. இரண்டாம் பதிப்பு 1974இல் வெளிவந்து அதுவும விற்றுப்போய் அதன் மூன்றும் பதிப்பு தற்போது அச்சிலுள்ளது என அதனை வெளியிட்டுள்ள 'பாரதீய வித்தியா பவனத்தார்' பேருவகையோடு தெரிவிக்கின்றனர்.

இத்தகைய சுவைமிக்க நூலில் தன் வரலாற்றின் இன்றியமையாமையைப்பற்றித் திரு. சாக்ளா அவர்கள் எழுதியுள்ள அதிகாரத்தின் சுருக்கத்தை மட்டும் கீழே கொடுத்துள்ளோம்.

''தன் வரலாறு எதற்காக எழுத வேண்டும்? தனக்குத் தானே நீதி கற்பித்துக்கொள்ளவா அல்லது ஒருவனுக்கு அவனுடன் வாழ்ந்தோரிடம் நியாயம் வேண்டியா அல்லது எதிர் காலத்திற்கு ஒருவன் ஏன் வாழ்ந்தான் என்பதை எடுத்துக் கூறவா? இதில் எது பொருத்தமானது?

மனிதனுடைய வேணவாக்களில் ஒன்று தன் வரலாற்றை எழுதுவது. ஒருவன் தான் செய்த எத்தகைய பணியையும் அழியாது காக்க விரும்புகிறன். அதனுல் அதனை எழுத்தில் வடிக்கிறன். இல்லையேல் மறதி நிறைந்த உலகம் அவனை விரைவில் மறந்துவிடுமல்லவா? எல்லோருக்கும் இரங்கலுரை வழங்கப்படுவது இயற்கை; ஆனுல் யாரும் தனக்கு நிகழ்த்தப் பெறும் இரங்கலுரையைக் கேட்க முடியாதல்லவா?

பெரும்பாலான இரங்கலுரைகளில் அவர்கள் பிறந்த நாள், படித்த இடம், பெற்ற பட்டங்கள், செய்த பணி ஆகியவை மட்டுமே காலவரிசைப்படி கொடுக்கப் பெற்றிருக்கும். ஆனுல் ஒன்றிலாவது அவன் வாழ்க்கையிற் கண்ட கனவுகள் என்ன, அடைந்த தோல்விகள் என்ன என்பனவற்றைக் காண முடியாது. தசையும் குருதியும் அற்ற எலும்புக்கூடு போன்றது அது. தன் வரலாறுதான் உண்மையில் உயிரோட்டமுடைய மனிதனைப் போன்றது.

தன் வரலாற்றை எழுதுவதிலும் பல முறைகள் உள்ளன. பிறந்த நாளிலிருந்து தொடங்கிப் படிப்படியாக வளர்ந்த முறையைக் கூறிச் செல்வது ஒருவகை. இது பழைய முறை, ஆனால் சுவை தராத முறை. பல்வேறு செய்திகளைப் பல்வேறு கோணங்களிலிருந்து பார்த்துச் சுவையான நடையில் எழுது வதையே அனைவரும் விரும்புகின்றனர்.

கால முறைப்படி எழுதுவதைக் கண்டிக்கும் வகையில் ஆண்ட்ரு மால்ராக்ஸ் (Andre Malraux) எழுதிய ஆன்றி-மெமோயர்ஸ் (Ante-memoirs) என்னும் தன் வரலாற்று நூலில் கண்டம் விட்டுக் கண்டம், காலம் விட்டுக் காலம், பொருள் விட்டுப் பொருள் என்று ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத செய்திகளை எழுதியுள்ளார்.

ஆல்டேன் பிரபு (Lord Haldane) எழுதியுள்ள தன் வரலாற்று நூல் ஆங்கிலத்திலே வெளிவந்திருக்கின்ற சிறந்த தன் வரலாற்று நூல்களில் ஒன்று. அதன் இறுதியில் அவர் 'வாழ்க்கையின் தத்துவம் என்ன' என்பதையும் தம் வாழ்வி லிருந்து அவர் கற்றுக்கொண்டது என்ன என்பதையும் விளக்கி யுள்ளார். ஒரு மனிதன் ஒரு பிறவி எடுப்பதே போதும் என்று அவர் கூறுகிறார். ஒருவன் செய்த பணியின் தன்மையையும் தரத்தையும்தான் பார்க்க வேண்டுமே தவிர அவனுக்கு ஏற்பட்டது தோல்வியா வெற்றியா என்பதைப் பார்க்கக்கூடாது என்கிறார்.

ஒரு மனிதன் நிறைவான வாழ்க்கை வாழ்ந்து பல்வேறு துறைகளில் பயிற்சியும் அனுபவமும் பெற்றிருப்பானேயாயின் அவன் தவறாது தன் வரலாற்றை எழுத வேண்டும். அப்போது அதைப் படிப்பவர்கள் அதனால் உறுதியான பலன்களைப் பெற முடியும். ஒருவர் செய்த தவறுகளை அவர்கள் மீண்டும் செய்து படுகுழிகளில் விழாது தம்மைக் காப்பாற்றிக்கொள்ள முடியும்.

இளைஞர்கள் தன் வரலாற்றை எழுத முடியாது. ஏனெனில் அவர்களுக்கு இன்பக் கற்பனை நிறைந்த எதிர்கால வாழ்வு காத்துக் கிடக்கின்றது. வாழ்க்கையின் இறுதிநிலையில் தான் ஒருவர் தன் வரலாற்றை எழுத வேண்டும். அப்போது தான் இன்பக்கனவுகள் காண்பதை நிறுத்தி, நடந்துபோன நிகழ்ச்சிகளை மீண்டும் மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்து அவற்றை நினைவில் நிறுத்துவதிலேயே மனம் ஈடுபட்டிருக்கும்.

கடந்துபோன துன்ப நிகழ்ச்சிகளையே ஒருவர் எண்ணிக் கொண்டிருந்தால் அவர் துன்பம் நிறைந்த தன் வரலாற்றை எழுத முடியாது, எழுத விரும்பவும் மாட்டார். ஒவ்வொருவர்

வாழ்க்கையிலும் மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்த்து இன்புறக் கூடிய பசுமையான இன்ப நிகழ்ச்சிகள் இருக்கத்தான் செய்யும். அவற்றைத்தான் எழுத்தில் வடித்து வைத்து மீண்டும் எண்ணத்தால் கடந்துபோன வாழ்க்கையை வாழ விரும்புவர்.

சிலர் வாழ்க்கை வரலாற்றில் 'தான்' என்ற தன் முனைப்பு இருக்கும். இதை நீக்க முடியாது. இதைப்பற்றி சோமர்செட் மாகம் (Somerset Maugham) குறிப்பிடும்பொழுது ஒவ்வொருவரும் எழுதும்போது தம்மைப் பற்றிப் பெரிதாகத்தான் எண்ணிக்கொள்ள வேண்டும். இதில் தவறில்லை. அவர்களைப் பொறுத்தவரை அவர்கள் பெரிய மனிதர்கள் தாமே.

இறுதியாகத் தன்வரலாறு எழுதும்போது, 'எந்த அளவு வரை ஒருவர் செய்தியைக் கூறவேண்டும்? என்பது நோக்கத் தக்கது. எந்த மனிதனும் தனிமையில் வாழ்வதில்லை. பல்வேறு துறைகளிலுள்ள பல்வேறு மக்களுடன் பல்வேறு சூழ்நிலைகளில் ஒருவன் பழகியிருக்க முடியும். பிறர் மனம் புண்படக் கூடிய செய்திகளைக் கூறலாமா? மக்கள் மறந்துவிட்ட சில செய்திகளை நினைவூட்டலாமா? மிகவும் தனிப்பட்ட, சொந்த செய்திகளைக் கூறலாமா? இதுபோல் பல வினாக்கள் எழும்.

இவற்றுக்கெல்லாம் ஒரேவிடையைத்தான் கூறமுடியும். ஒருவர் உண்மையைத்தான் கூறவேண்டும்; உண்மையைத் தவிர வேறு எதையும் கூறக்கூடாது. ஆனால் அவரால் முழு உண்மையைக் கூற முடியாது; கூறவும் கூடாது. தாம் பார்த்த உண்மைகளையும் பழகிய சூழ்நிலைகளையும் கண்டது கண்டவாறு ஒருவர் கூறவேண்டும். சிலவற்றை உய்த்துணர்ந்தும் சொல்லலாம். ஆனால் எதையும் கண்டிக்கவோ குற்றஞ் சாட்டவோ கூடாது. அந்த உரிமையை வரலாற்றுக்கும் எதிர்காலத்தின் தீர்ப்புக்கும் விட்டுவிட வேண்டும். ஒரு பணியைச் செய்ததோ அல்லது செய்யாது விட்டதோ நன்மையா தீமையா என்பதை எதிர்காலம் கூறட்டும் என்று விட்டுவிடுவதே நல்லது. நிகழ்கால நிகழ்ச்சிகளையும் உயிரோடிருப்பவர்களையும்பற்றித் தன்வரலாற்றில் எழுதும்போது பக்குவமாக உள்ளதை உள்ளபடி கூறி விட்டுவிடுதல் வேண்டும்.''

திரு. சாக்ளா அவர்கள் கருத்துக்கு முன்னோடியாக அருள்மிகு வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள் தம் வரலாற்றைக் 'குருபர தத்துவம்' என்ற தலைப்பில் செய்யுள் வடிவில் எழுதியுள்ளமை நமக்கு எத்துணை பெருமை தருகின்றது. (தொடரும்)

—வ.சு.

# உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

புல்[1]—பொருந்தற் கருத்து வேர்ச்சொல்.

புல்லுதல் = 1. பொருந்துதல். "அல்லாவாயினும் புல்லுவ வுளவே" (தொல். பொருளியல், 27). 2. புணர்தல். "புலந்தாரைப் புல்லாவிடல்" (குறள் 1303). 3. தழுவுதல். "என்னகம்.......புல்லி" (பு. வெ. 9 : 49). 4. வரவேற்றல். "புல்லா வகம்புகுமின்" (நாலடி. 303). 5. ஒத்தல். "புத்தே ளுலகிற் பொன்மரம் புல்ல" (தொல். பொ. 289, உரை). 6. ஒட்டுதல். (W). 7. நட்புச் செய்தல். "ஒல்லா ரிடவயிற் புல்லிய பாங்கினும்" (தொல். புறத். 21, உரை).

புல் = புணர்ச்சி. (பிங்.).

புல் = புலி. (திவா.).

புல்—புல்லி—புலி = முன்னங் கால்களால் தழுவிப் பற்றும் வேங்கை அல்லது சிறுத்தை.

ம., க., தெ., புலி, து, பில்லி.

புல்—புல்கு. புல்குதல் = 1. அணைதல். அணைத்தல். "அன்னந் தன்னிளம் பெடையொடும் புல்கி" (தேவா. 584: 9). 2. புணர்தல். (சது). 3. நண்பராய் மருவுதல். (யாழ்ப்.)

புல் — புலம் = 1. ஐம்பொறிகள் பொருள்களொடு பொருந்தி அறியும் அறிவு. "நுண்மா ணுழைபுலம்" (குறள். 407). 2. பொறியுணர்வு. "அடல்வேண்டு மைந்தன் புலத்தை" (குறள். 343). 3. அறியும் பொறி. "புலம்பல கலங்க" (ஞானா. 27 : 6). 4. இலக்கணம். "புலந்தொகுத் தோனே" (தொல். பாயிரம்). 5. நூல். 6. மறைநூல். "புலம்புரி யந்தணர்" (பரிபா. 6 : 45). 7. கூர்மதி. (W) 8. துப்பு. (C. G.). 9. பொருந்தியிருக்கும் நிலம். "புலங் கெட விறுக்கும் வரம்பி ருனை" (புறம். 16). 10. நிலம். 11. விளைநிலம். "விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்" (குறள். 85).

புலம்—புலன் = 1. பொறியறிவு. "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்" (குறள். 1101). 2. பொறி,

"புலனொடு புணரான்" (ஞான. 48 : 9). 3. அறிவுடைமை. "செல்வம் புலனே புணர்வு" (தொல். மெய்ப். 11). 4. கண் கூடு. "பெரும்புணர்ப் பெங்கும் புலனே" (திவ். திருவாய். 2 : 8 : 3). 5. தெளிவு. 6. தெளிவான வனப்பு என்னும் பனுவல் வகை.

*"சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து*
*தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்*
*புலனென மொழிப புலனுணர்ந் தோரே."*

(தொல். செய். 239). 7. துப்பு. புலனறிதல் (உ. வ.). 8. பொறி போன்ற உறுப்பு. "ஒன்பதுவாய்ப் புலனும்" (நாலடி. 47). 9. வயல். "புலனந்த" (பரிபா. 7 : 9).

புலம்—புலம்பு = நிலம். மெல்லம் புலம்பு = நுண்மணலால் மெல்லிய நெய்தல் நிலம். (திருக்கோவை, 379, உரை). மெல்லம் புலம்பன் = நெய்தல் நிலத் தலைவன். "மெல்லம் புலம்பன் பிரிந்தெனை" (குறுந். 5).

புலம்பு—புலம்பன் = அறிவுடைய ஆதன் (ஆன்மா). "புலம்பனுக் கொன்றும் புணர்ந்திலை போலும்" (திருமந். 2934).

புலம்—புலமை = 1. அறிவு. "புரையுநரில்லாப் புலமை யோய்" (திருமுரு. 280). 2. கல்வி.

புலம்—புலவு = நிலம், வயல். க. பொல.

புலம் — புலவன் = 1. அறிஞன். 2. அறிவுள்ள பாவலன். 3. தேவன். 4. அறிவன் (புதன்).

புலவன் (ஆ. பா.)—புலத்தி (பெ. பா.)

ஒ. நோ: கிழவன் — கிழத்தி.

புலத்தி — புலச்சி = அறிவுள்ளவள். "சிவனிற் புலச்சி தனக்கு" (திருப்பு. 123). ஒ. நோ: வேட்டுவத்தி—வேட்டு வச்சி.

புல்ல = 1. பொருந்த. 2. போல (உவமவுருபு). "புல்லப் பொருவப் பொற்பப் போல" (தொல். உவம. 11).

புலம் — புலர். புலர்தல் = தெளிதல், தெளிவாதல். "நல்லா ணெஞ்சமும் புலர்ந்த தன்றே" (சீவக. 1937). 2. விடிதல். "புலர் விடியல்" (பு. வெ. 9 : 47)

ம. புலருக.

புலர்ச்சி = விடிகை. "இருளின் புலர்ச்சி யென்றென்று" (வெங்கைக் கோவை, 380).

புலர்பு = விடியல். "பனிப்புலர் பாடி" (பரிபா. 11 : 83).

புலர்—புலரி = 1. விடியல். "புலரி புலருதென்று" (திருமந். 210). 2. கதிரவன். "தாமரைப் பூநனி முகிழ்த்தன புலரிபோன பின்" (கம்பரா. சித்திர. 42).

புல் — புர் — புரை. புரைதல் = 1. பொருந்துதல். "புறத்தோ ராங்கட் புரைவ தென்ப" (தொல். கற்பியல், 35). 2. தைத்தல். "தம்முடைய வஸ்திரத்தைப் புரையா நின்றூராய்" (ஈடு, 4 : 10 : 7). 3. ஒத்தல். "வேய்புரை பெழிலிய.......பணைத்தோள்" (பதிற்றுப். 65 : 8) 4. நேர்தல். "புணர்ந்தோரிடை முலையல்கல் புரைவது" (பரிபா. 6 : 55). க. புருள்.

புரை = ஒப்பு. (பிங்.). தெ. புருது.

புரைய = 1. பொருந்த. 2. போல (உவமவுருபு), "கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய" (தொல். உவ. 15).

புல் — புள் — புண்—புணர். புணர்தல் = 1. பொருந்துதல். (திவா.) 2. நட்பாடல். "ஊதிய மில்லார்ப் புணர்தல்" (நாலடி. 233). 3. ஏற்புடையதாதல். "குரல் புணர்சீர்" (புறம். 11). 4. மேற்கொள்ளுதல். "பொருவகை புரிந் தவர் புணர்ந்த நீதியும்" (பெருங். வத்தவ. 6 : 6). 5. உடலிற் படுதல். "மென்முலைமேற் பனிமாருதம் புணர" (கம்பரா. சூர்ப்பண. 77). 6. கலவி செய்தல். "மன்னியவளைப் புணரப் புக்கு" (திவ். பெருமாள். 6 : 9). 7. சொற்கூடுதல். "மொழிபுண ரியல்பே" (தொல். எழுத். புணரியல், 6). 8. கூடியதாதல். "புணரின் வெகுளாமை நன்று" (குறள். 308).

ம. புணருக, க. பொணர்.

புணர்ச்சி = 1. சேர்க்கை. (பிங்.). 2. ஓரிடத்தா ராயிருக்கை. "புணர்ச்சி பழகுதல் வேண்டா" (குறள். 785). 3. கலவி. "தகை மிக்க புணர்ச்சியார்" (கலித். 118). 4. சொற் கூட்டு. "எழுத்தோ ரன்ன பொருள்தெரி புணர்ச்சி" (தொல். புணரியல், 39).

புணர்ப்பு=1. பனுவல், (பிரபந்தம்). "நாயகன் பேர் வைத்துப் புணர்த்த புணர்ப்புக் கேட்டாற் போலே காணும்" (ஈடு, 5 : 9 : 3). 2. இணைப்பு. 3. கலவி செய்விப்பு. 4. சொற்கூட்டு. 5. சூழ்ச்சி. "முதியவன் புணர்ப்பினால்" (கலித். 25). 6. உடம்பு. (சூடா.). 7. மாயம். "புணர்ப்போ கனவோ" (திருக்கோவை, 17).

புணர்வு=1. சேர்க்கை. 2. கலவி. "புணர்வின் னினிய புலவிப் பொழுதும்" (சீவக. 1378). 3. இணைப்பு (சூடா.). 4. உடம்பு. (பிங்.).

புணர்—புணரி=கலந்தெழும் பேரலை. "வரைமருள் புணரி வான்பிசி ருடைய" (பதிற்றுப். 11).

புண்—புணி. புணித்தல்=சேர்த்துக் கட்டுதல்.

புணி — பிணி. பிணித்தல் = 1. சேர்த்துக் கட்டுதல். "பெருவெளிற் பிணிமார்" (மலைபடு. 326.). 2. வயப்படுத்துதல். "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்" (குறள். 643). 3. கட்டித் துன்புறுத்துதல்.

பிணி—1. கட்டுகை. "பிணியுறு முரசம்" (புறம். 25). 2. கட்டு. "பிணி நெகிழ்பு" (பரிபா. 3 : 55). 3. நெசவுத் தறியின் நூற்படை (யாழ்ப்.). 4. பற்று. "பொருட் பிணிச் சென்று" (அகம். 27). 5. (கட்டு நெகிழா) மொட்டு. "பிணிநிவந்த பாசடைத் தாமரை" (கலித். 59). 6. பின்னல். "பிணிகொள் வார்குழல்" (தேவா. 469 : 3). 7. (கட்டி நெருக்குவது போன்ற) நோய். "பிணிக்கு மருந்து பிறமன்" (குறள். 1102). 8. துன்பம்.

பிணியகம்=காவலிடம். "பிறர் பிணியகத் திருந்து" (பட்டினப். 222).

பிணி—பிணிகை=கச்சு (பெண்டிர் மாரொட்டிச் சட்டை).

புண்—புணை. புணைத்தல்=கட்டுதல்.

புணை=1. கட்டு, விலங்கு. (சூடா.). 2. தெப்பம் (கட்டுமரம்). "நல்லாண்மை யென்னும் புணை" (குறள். 1134). 3. உதவி. "அறம்புணை யாகலு முண்டு" (கலித். 144). 4. ஒப்பு. "புணையில்லா வெவ்வ நோய்" (கலித். 124). 5. ஈடு. 6. ஆட்பிணை. "இவனுக்குப் புணை" (S. I. I. V. 173).

புனை—புனையல்=மாட்டுப் பிணைப்பு. புனையலடித்தல்= பிணைத்த கடாவிட்டுக் கதிரை யுழக்குதல். புனையல்—புனைசல்.

புனை — பிணை. பிணைதல் = 1. சேர்தல், இணைதல். "கழுநீர் பிணைந்தன்ன வாகி" (சீவக. 491). 2. செறிதல். "பிணையூப மெழுந்தாட" (மதுரைக். 27). 3. புணர்தல். "மங்கையர் தம்மொடும் பிணைந்து" (திருவாச. 41 : 6).

பிணை=1. பொருத்து. "இதையுங் கயிறும் பிணையு மிரிய" (பரிபா. 10 : 54). 2. கட்டு. 3. இணைக்கப் படுகை. "பிணையார மார்பம்" (பு. வெ. 12 : 6). 4. பூமாலை. "வெறி கொண்ட முல்லைப் பிணைமீது" (பெரியபு. கண்ணப். 57). 5. பொறுப் பாண்மை. "பிணைக் கொடுக்கிலும் போக வொட்டாரே" (திவ். பெரியாழ். 4 : 5 : 2). 6. உடன்பாடு. (யாழ். அக.) 7. களைகண், பேணுகை. "பெட்டாங் கொழுகும் பிணையிலி" (நான்மணி. 91).

பிணை—பிணைச்சு=புணர்ச்சி. (பிங்.).

புனையல்—பிணையல்=1. ஒன்று சேர்கை. "தாமரையல ரிணைப் பிணையல்" (பரிபா. 2 : 53). 2. நடன இணக்கை. "பிண்டியும் பிணையலும்" (சிலப். 3 : 18). 3. மாலைவகை. "பித்திகைப் பிணையன்மாலை" (சீவக. 2177). 4. பூமாலை. "தாதுகு பிணையல் வீசி" (சீவக. 463). 5. கதிருழக்குங் கடாப் பிணைப்பு. 6. புணர்ச்சி. 7. கதவுப் பொருத்து.

புண்—பூண். பூணுதல்=1. நுகத்திற் கட்டப்படுதல். "பூண்டன புரவியோ" (கம்பரா. இராவணன்வ. 38). 2. மணஞ் செய்தல். "பூண்டான் கழித்தற் கருமையால்" (நாலடி. 56). 3. நெருங்கி யிறுக்க மாதல். அவனுக்குப் பல் பூண்டு விட்டது. (உ. வ.). 4. விலங்கு மாட்டப்படுதல். "புனை பூணும்" (குறள். 836). 5. நுகம் மாட்டிக் கொள்ளுதல். "படுநுகம் பூணாய் பகடே" (சிலப். 27 : 228). 6. அணிதல். "பூண்பதுவும் பொங்கரவம்" (திருவாச. 12 : 1). 7. மேற்கொள்ளுதல். "அன்பு பூண்டனை" (கம்பரா. விபீடணனடை. 2). "போர்த்தொழில் வேட்கை பூண்டு" (கம்பரா. படைத்தலை. 1).

க. பூண், தெ. பூனு.

பூண்=1. உலக்கை தடி முதலியவற்றின் முனையிற் செறித்த தொடி அல்லது வளையம். "பூண் செறிந்த தலையை

யுடைய பரிய தண்டுக் கோலே' (புறம். 243, உரை). 2. யானைக் கோட்டின் கிம்புரி. (பிங்.). 3. அணி. "நுண் பூணகம் வடுக்கொள முயங்கி" (மதுரைக். 569). 4. கவசம். "பூணணி மார்ப போற்றி" (சீவக. 264).

II பூண், தெ, பொன்னு.

பூண்—பூணி = 1. நுகம் பூணும் எருது. "பூணி பூண்டுழப் புட்சிலம்பும்" (தேவா. 647 : 3). "கடம்பூருக்கு வழியெது வெனின் இடம்பூணி யென்னுவின் கன்று எனல்." (நேமி. சொல். 5. உரை). 2 கன்றுகாலி. "பூணிமேய்க்கு மிளங் கோவலர்" (திவ். பெரியாழ். 3 : 6 : 7). 3. விடையோரை (இடபராசி). 4. ஒருவகைப் பறவை. "பெரும்பூட் பூணியும் பேழ்வாய்க் கொக்கும்" (பெருங். உஞ்சைக். 51 : 69).

பூணித்தல் = 1. பொருத்துவித்தல். 2. தோற்று வித்தல். "விசும்பிற் புத்தப் புதுமதியம் பூணித்தான்" (மாறனலங். 224). 3. மேற்கோள் பூணுதல். "என்னோடே பூணித்து" (ஈடு, 10 : 8 : 5). 4. பொருத்திக் குறித்தல். (to allude to, to refer to).

பூண்—பூட்கை = 1. மேற்கோள் (பிரதிக்ஞை). "பூட்கை யில்லோன் யாக்கை போல" (புறம். 69). 2. கொள்கை. 3. மேற்கோளொடு கூடிய வலிமை "ஓடாப் பூட்கைப் பிணி முகம் வாழ்த்தி" (திருமுரு. 247).

பூண்—பூண்டு = பற்போன்ற பருப்புக்கள் அல்லது சுளைகள் நெருங்கிப் பொருந்திய பூடுவகை. எ - டு : 1. வெங்காயப் பூண்டு, வெள்ளைப் பூண்டு. 2. சிற்றெச்சம் (Vestige, trace). "ஆண்பூண்டு கண்டாலும் பேசாமற் கட்டிட்டாள்." (விறலி விடு. 822). ஆரியப் பூண்டை வேரறுக்க வேண்டுமென்பது ஒரு சிலர் கொள்கை.

பூண்டு—பூடு = 1. வெங்காயம் அல்லது வெள்ளுள்ளி. 2. நிலத்தொடு படர்ந்த சிறுசெடி. "புல்லாகிப் பூடாய்" (திருவாச. 1 : 26.).

ஒ. நோ : கூண்டு கூடு.

பூண்—பூட்சி = 1. பொருந்துகை, பூணுகை. (கது.). 2. அணி. (கல்லா. 91 : 9, உரை). 3. புணர்ப்பு. "பூதப் பூட்சியுள் ளெழும் போதமும்" (பிரபோத. 31 : 36). 4. உயிரொடு பூண்ட வுடல். (பிங்.). "புல்லுயிர்க்கும் பூட்சி

புணர்த்தாய்'' (தேவா. 1160 : 6). 5. கொள்கை. 6. மன வுறுதி. ''உறுபொரு ளுணரும் பூட்சியோய்'' (கம்பரா. உயுத். மந்திர. 66). 7. உரிமை. (அக. நி.). 8. வரிவகை. எ-டு: ஈழம் பூட்சி.

பூண்—பூட்டு (பி. வி.). பூட்டுதல்=1. பொருத்துதல். 2. காளை முதலியவற்றை நுகத்திற் பிணைத்தல். ''களிறுபல பூட்டி'' (பதிற்றுப். 44 : 16). 3. பொருத்தி அணிதல். ''பைந்தார் பூட்டி'' (பதிற்றுப். 42 : 10). 4. மாட்டுதல். ''பொருசிலை மேற்சரம் பூட்டான்'' (ஏரெழு. 17). 5. தொழுவி லடித்தல். (W.). 6. விலங்கு மாட்டுதல். (W.). 7. நாணேற்று தல். ''பூட்டுசிலை'' (சீவக. 1788). 8. பூட்டுப் பூட்டுதல். 9. இறுகக் கட்டுதல். ''பூட்டிய கையன்'' (கம்பரா. குகப். 34). 10. மனத்தை யிணைத்தல். ''என்பாற் பூட்டு நண்பு பூண்டான்'' (பாரத. வாரணா. 37). 11. ஒப்படைத்துப் பொறுப் பேற்றுதல். ''தாதை பூட்டிய செல்வம்'' (கம்பரா. வாலிவ. 81). 12. பொருத்திக் கூறுதல். (W.). 13 வழக்குத் தொடுத்தல். ''கொடுமைசால் வழக்குப் பூட்டி'' (திருவிளை. மாமனு. 14).

ம. பூட்டுக. க. பூடு.

பூட்டு—பூட்டகம்=1. போலி. எ-டு: பூட்டக வேலை. 2. வீண் பெருமை. ''என்ன பூட்டகமோ'' (பெருந்தொ. 1275). 3. வஞ்சகம். ''பூட்டகமோ விது'' (இராமநா. அயோத். 21). 4. மருமம் (இரகசியம்). அந்தச் செய்தி பூட்டகமாயிருக்கிறது. (உ. வ.).

க. பூட்டக, தெ. பூட்டகமு.

புல்—பொல்—பொரு. பொருதல்=1. பொருந்துதல். ''பொய்பொரு முடங்குகை'' (சிலப். 15 : 50). 2. தொடுதல், முட்டுதல். ''விண்பொரு புகழ்'' (புறம். 11). ''விண்பொரு வியன்குடை'' (புறம். 35). 3. ஒப்பாதல். ''மலை யெத்தனை யத்தனை.......பொருகிற்பன'' (கம்பரா. அதிகா. 150). 4. தடவு தல். ''வீணை பொருதொழிலும்'' (சீவக. 1795). 5. தாக்கு தல். ''பொருபுனல் தரூஉம்'' (சிறுபாண். 118). 6. கடை தல். ''ஒன்றைக் கிரி மத்தைப் பொருது'' (திருப்பு. 1). 7. வன்மையாய் வீசுதல். ''குரூஉப் புகைபிசிரக் கால் பொர'' (பதிற்றுப். 15 : 6). 8. போர் செய்தல். ''ஈரைம் பதின்மரும் பொருது களத்தொழிய'' (புறம். 2). 9. சூதாடுதல். ''போது போகுமா றிருந்து பொருதும்'' (பாரத. சூது. 169). 10. மாறு

படுதல். "கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை" (புறம். 35).

பொரு=1. ஒப்பு. "பொருவாகப் புக்கிருப்பார்" (தேவா. 780 : 11). 2. உவமை. (பிங்.). 3. எதிர்த்தடை. "ஆறு சமயங்கட் கெல்லாம் பொருவாகி நின்றானவன்" (திவ். திருவாய். 9 : 4 : 8).

பொருமுக வெழினி=பொருந்தி வரும் இரட்டைத்திரை. பொருங்கதவு=இரட்டைக் கதவு.

பொரு — பொருவு. பொருவுதல் = 1. பொருந்துதல். 2. ஒத்தல் "உன்னைப் பொருவு முனிவோர்" (கந்தபு. திருக்கல். 55). 3. நேர்தல். "போன்றன வினைய தன்மை பொருவியது" (கம்பரா. இரணிய. 152). 4. உராய்தல். "விற்கொணாண் பொருவுதோள்" (கம்பரா. நிந்தனை. 52).

பொருவு = ஒப்பு. "பொருவற்றா ளென்மகள்" (திவ். திருநெடு. 19).

ஒப்புப்பொருவு, உறழ்பொருவு எனப் பொருவு இருவகை.

பொருவ = ஓர் உவமவுருபு. "புல்லப் பொருவ" (தொல். உவம. 11).

பொரு — பொருந். பொருநுதல் = 1. பொருந்துதல். "உண் பொருந்" (நன். 137). 2. உடன்படுதல். (W.).

பொருந்—பொருந்து. பொருந்துதல்=1. நெருங்குதல். "பொருந்தவந் துற்ற போரில்" (கம்பரா. கும்பகருண. 13). 2. அடைதல். "வந்தடி பொருந்தி முந்தை நிற்பின்" (புறம். 10). 3. அளவளாவுதல். (பிங்.). 4. புணர்தல். "மணிமேகலை......பொருந்தின ளென்னும் பான்மைக் கட்டுரை" (மணி. 23 : 46). 5. இலக்கண நெறிப்படுதல். "பண் பொருந்த இசை பாடும்" (தேவா. 208 : 5). 6. இயலுதல். "பூதமைந்தினும் பொருந்திய வுருவினாற் புரளான்" (கம்பரா. இரணிய. 18). 7. நிகழ்தல். "புண்ணியம் பொருந்திற்று" (கம்பரா. கும்பகருண. 131). 8. நிறைவேறுதல். (W). 9. தகுதியாதல். 10. அமைதல். "அறநெறி பொருந்த" (கம்பரா. விபீடண. 43). 11. மனம் இசைதல். "கொணர்குவா யெனப் பொருந்தினன்" (கம்பரா. மருத்து. 85).

௯. பொருது.

பொருந்து—பொருத்து=1. இணைப்பு. (W.). 2 மூட்டு. 3. உடலெலும்பு மூட்டு. "பொருத்தெலாங் கட்டுவிட்டு" (பணவிடு. 298). 4. ஒன்று சேர்ப்பு. "பொருத்துறு பொருளுண்டாமோ" (கம்பரா. கும்பகருண. 157). 5. நெற்றிமூலை மண்டையோட்டுப் பொட்டு.

பொருத்து—பொருத்தம்=1. பொருந்துகை. 2. தகுதி. "பொய்ம்முகங் காட்டிக் கரத்தல் பொருத்தமன்று" (திருக்கோ. 356). 3. இணக்கம். அவனுக்கும் எனக்கும் பொருத்தமில்லை. (உ. வ.). 4. மணமக்களின் பிறப்பிய (சாதக) இணக்கம்.

பொருத்து—பொருத்தனை=1. பொருத்தம். 2. நேர்த்திக்கடன். (துன்பநிலையில் தெய்வத்தொடு இட்ட சூளை நிறைவேற்றுதல்). இதைச் சென்னைப் ப. க. த. அகர முதலியில் 'பிரார்த்தனை' என்னும் வடசொல்லின் திரிபாகக் குறித்திருப்பது குறும்புத்தனமாம்.

பொருத்து—பொத்து.

பொத்துதல்=1. பொருத்துதல். 2. கலத்தல். "நெஞ்சம் பொத்தி" (பு. வெ. 11, ஆண்பால் 4). 3. தீ மூட்டுதல். "கனையெரி பொத்தி" (மணி. 2 : 42). 4. தைத்து மூட்டுதல். 5. தைத்தல். இலையைப் பொத்து (உ. வ.). 6. மாலை கட்டுதல். "மறுகண்ணியும் பொத்தி" (ஈடு, 1 : 3 : 1). 7. கற்பனை செய்தல். "இல்லாத் தெய்வம் பொத்தி" (தேவா. 658 : 7). 8. திறப்பின் அல்லது கிழிவின் இருபுறத்தையும் பொருத்தி மூடுதல். பொல்லம் பொத்துதல். (உ. வ.). 9. வாய் கண் காது முதலியவற்றை மூடுதல். "தன்செவித் தொளை யிருகைகளாற் பொத்தி" (கம்பரா. இரணிய. 22). 10. விரல் மடக்கி உள்ளங்கையை மூடுதல். (உ. வ.). 11. மறைத்தல். "செய்பால்.........கிளர்படி பொத்தின" (கம்பரா. கரன்வதை. 100). 12. புதைத்தல். "மண்ணிடைக் கடிது பொத்துதல்" (கம்பரா. விராதன்வதை. 43).

(செ. குன்றிய வி.)=நிறைதல். "வான்மேற் பொத்தின குழு" (கம்பரா. கரன்வதை. 100).

க., ம. பொத்து.

பொத்து—பொத்தகம்=1. சுவடி. "நிறைநூற் பொத்தகம் நெடுமனை யேற்றி" (பெருங். உஞ்சைக். 34 : 26). 2. திலக்கணக்கு. "பொத்தகப்படி குழி" (S. I. I. iii, 80).

பொத்தகம்—வ. புஸ்தக, இ. புஸ்தக்.

பூர்ஜம் பட்டையினின்று செய்யப்பட்டது என்று வடவர் கூறும் பொருட்கரணியம் பொருந்தாது. புஸ்தக என்னும் வட சொல் வடிவையே புத்தகம் என்று திரித்து வழங்கி வருகின்றனர்.

ஒ. நோ : மனம்—வ. மனஸ்—மனது.

மதி—மாதம்—வ. மாஸ—மாசம்.

பொத்தகம்=ஏடுகளின் சேர்க்கை. ஏட்டுச் சுவடி, சுவடி சேர்த்தல் என்னும் வழக்குகளை நோக்குக.

பொத்து—பொட்டு = நெற்றிமூலை மண்டை யோட்டுப் பொருத்து.

பொட்டுதல் = பொருத்துதல், சேர்த்துக் கட்டுதல். பொட்டு—பொட்டணம்.

பொரு—பொருநன்=1. உவமிக்கப் படுவோன். "போர் மிகு பொருந" (திருமுரு. 276). 2. ஏர்க்களத் தேனும் போர்க்களத்தேனும் சென்று உவமித்துப் பாடும் பாணன் (பாடகன்). 3. உவமித்துப் பாடியாடும் கூத்தன். "பண்ணிமை யடைத்த பலகட் பொருநர்" (கம்பரா. ஊர். 162).

பொருந்—பொருநை = பாறையொடு பொருது (மோதி) இறங்கி யோடும் (தாமிரபரணி) ஆறு. "குமரி பொன்னிவகை பொருநை நன்னதிகள்" (குமர. பிர. மீனு. பிள். 11). ஒ. நோ: "கல்பொரு திறங்கும் மல்லற் பேரியாறு" (புறம். 132).

பொருநை — பொருநல். "பொருநல் வடகரை" (திவ். திருவாய். 6 : 5 : 8).

பொருந்—(பொருந்து)—பொருந்தம்=பொருநை. (பிங்.).

பொரு—பொருள்=1. பொருந்திய உடைமை. 2. பண்டம். 3. பொன். (சூடா.) 4. செல்வம். "பெரும் பொருள் வைத்தீர் வழங்குமின்" (நாலடி. 6). 5. சொத்து. 6. மதிக்கப் படுவது. 7. உருப்படி. 8. சொற்பொருள். 9. புலனம் (விஷயம்). 10. உவமியம் (உபமேயம்).

பொருள்—பொருட்டு=1. (பெ.) கரணியம் (காரணம்). (பிங்.). 2. மதிப்பிற்குரியது. அதையொரு பொருட்டாகக்

கொள்ளவில்லை. (உ. வ.). (கு. வி. எ.) 3. பயனோக்கி (நிமித்தம்). ''வேளாண்மை செய்தற் பொருட்டு'' (குறள். 81). ம. பொருள், க. பொருளு, து. பொர்லு.

பொரு — போர் = 1. பொருந்துகை. ''திண்போர்க் கதவம்'' (மதுரைக். 354). 2. சண்டை. ''குன்றேறி யானைப் போர் கண்டற்றால்.'' (குறள். 758). 3. இகல் (போட்டி). ''வீணைவாட் போர்க்கலாம்'' (சீவக. 620).

போர்த்தல் = 1. மூடுதல். ''பெற்றம் புலியின்றோல் போர்த்து மேய்ந்தற்று'' (குறள். 273). 2. மூட அணிதல். ''ஆரம் போர் திருமார்பை'' (கம்பரா. இராவணன்வதை. 240). 3. சூழ்தல். ''விண்ணோ ரெங்கோன் புடையிற் போர்த்தார்'' (கந்தபு. சிங்கமு. 457).

போர்க்கதவு = 1. பல பலகைகளை இணைத்த கதவு. ''புலிப்பொறிப் போர்க் கதவின்'' (பட்டினப். 40). 2. இரட்டைக் கதவு (சிலப்.).

பொல்—போல். போலுதல் = ஒத்தல். போல = உவம வுருபு. ''பொற்பப் போல'' (தொல். உவம. 11).

போல் — போலி = 1. ஒத்தது. 2. எழுத்துப்போலி. 3. வினைத்திறத்தில் மட்டமானது. எ - டு: போலிவேலை. 4. மட்டமான பொருள். எ - டு: போலிக்கல். போலும்—ஒப்பில் போலி. போன்றான்—போஞ்சான் = மட்டமான வேலைப் பாடுள்ளது.

# ஆப்பிரிக்கச் சுற்றுலா

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

(முன் இதழ் சஙு ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 14. திருமூலரும் திபேத்தியதாந்திரிகமும்

நாம் புத்த சமயத்தை ஆழ்ந்து ஆராய்ந்துள்ளேம், ஐப்பான், சீனத் திபேத்து இலங்கை, தாய்லாந்து புத்தருடன் பழகியுள்ளேன். நமது இந்திய முனிவர் எழுதிய பல புத்த நூல்கள் சீன ஜப்பானிய மொழி பெயர்ப்பில் வழங்குகின்றன. திபேத்தில் தாந்திரிக பௌத்தம் வழங்குகிறது. அதன் லாமா அனகாரிக கோவிந்தரும் அவர் மனைவி கௌதமீகோவிந்தையும் டர்பானுக்கு வந்திருந்தனர். கோவிந்தர் ஜெர்மானியர், பிரெஞ்சில் என்னுடன் பேசினர். என்னுடன் சில வெள்ளைக்காரரும் வந்தனர். லாமினி கோவிந்தை இந்திப் பெண் சாந்திநிகேதனிற் பயின்றவள். அனகாரிக கோவிந்தரும் சாந்திநிகேதனிற் சில காலம் தங்கினர். அப்போது இருவரும் யோகக்கலப் பெய்தினர்.

திபேத்திய லாமாக்கள் ''மணிபத் மேஷம்'' என்ற மந்திரத்தை ஒரு கைச் சக்கரத்திற் சுழற்றி ஜபசாதனம் செய்வது வழக்கம். இவர்கள் தர்மகாயம், சம்போககாயம், நிர்மாண காயம் என்ற மூன்று பயிற்சியுடையவர்கள். மேலரேபா என்பவர் இவர்களுக்கு ஆதிகுரு ஆவார்; அவர் தந்திர சாதனத்தால் பொன்னுடல் பெற்றவர். உலகின் ஆசையாணவ மாசுகளைக் கடந்த தேசுற்ற அருட்புலவர். இவரே திபேத்திய லாமாக்களின் பரமகுரு ஆவார். இவர் நூல்கள் பல நான் படித்திருந்தேன். அவை திருமூலக் கருத்துடையன. ஆண் பெண் வாழ்வை அருட்பிழம்பாக்கும் சாதன ரகசியங்கள் திருமந்திரத்தில் உள்ளன. அவற்றின் சாதனங்களை திரு அரவிந்தரிடமும், காளிதாஸ் யோகியிடமும், திபேத்திய லாமாக்களிடமும் நான் கற்றறிந்தேன். இதனல் காமங் கடந்த வாமநிலை பெற்று வச்சிர சரீரியாகப் பல்லாண்டு வாழலாம். உலக வாழ்வு விண்வாழ்வாகும்.

*பெண்ணிற் பிறங்கும் பெருங்கனலைப் புல்லினல்*
*மண்வாழ்வு மங்கலவிண் ணும்.*

அதுதான் மகாகுண்டலிக்கனல். அதன் பயிற்சியைத் திபேத்தியர் தூமயோகம் (Dumo yoga) என்பர். தூமாக்னி என்பது தாந்திரிக சிறப்புச் சொல்லாகும். இது வஜ்ரோளி, வைரோளி

போன்ற சாதனங்களைவிடச் சிறந்தது. ஆனால் இதற்கு மன வெற்றியும் அந்தக்கரண சுத்தியும் வேண்டும். அனகாரிக கோவிந்தரும், கோவிந்தையும் இந்த யோகத்திற் சித்தி பெற்று உலகெங்கும் பல மாணவருக்கு அதைப் பயிற்று வருகின்றனர். தூமம் (Dumo) என்பது மூலாதாரம், மணிபூரகம், அனாகதம் ஆகிய யோகசக்கரங்களில் உள்ள குண்டலிக் கனலாகும். இக்கனல் விழித்தெழுந்த பெண்சக்தி டாகினியாவாள். நாத விந்துக்களை அடக்கி, ஒரு துளி கூட வீணாகாது ஓஜஸ் தேஜஸ் ஆக்கி, இருபாலாரும் தூயதியானத்தில் ஊன்றினால், மின்சார விறுவிறுப்புப் போல சக்தி சலனம் எய்துவர். இந்தத் தாந்திர யோக சாதனத்தை லாமாலாமினிகள் தமது வழி பாட்டறையி லிருந்து எனக்கு ஆவேசமாக விளக்கினர். அத்தனையும் திரு மந்திரத்தில் உள்ளது.

நான் சிவசக்தி சாதனத்தை விரிவாக பிரெஞ்சில் பேசி னேன். ஐம்பது அன்பர் கருத்துறக் கேட்டனர். தமிழருக்குச் சொல்லுகிறேன், — எனது யோகசித்தி, Gospel of Perfect Life, Secrets of yoga திருமந்திர விளக்கம் ஆகிய நூல்களில் விளக்கம் காண்க. ஆனால் சிவ சக்தி யோகம் தெருவில் கற்பதன்று. பல்லாண்டுகள் குருவிடம் அடக்கமாகக் கற்க வேண்டும். சிவ சக்தி அல்லது சுத்தசக்தி யோகத்தைக் காமத் தினவெடுத்த கயவர் அறிய முடியாது; கேலி நையாண்டி செய்து தூற்றும் கிண்டல் கோமாளிகள் அறிய முடியாது.

*ஆறுருவி ஏழேறி ஆனந்தத் தேனுண்ணும்*
*சீறியெழும் ஆதாரத்தி,*
*கற்பூர தீபவொளி காணும் உடலுயிரும்*
*சிற்கனலை ஏற்றச் சிரம்*

என்ற யோகசித்திக் குறளின் விரிவுரையைக் காண்க. திருமூலர் விளக்குகிறார் சாதனப் படிகளை :

*அது இது என்னும் அவாவினை நீக்கித்*
*துதியது செய்து, சுழியுற நோக்கில்*
*விதியது தன்னையும் வென்றிடல் ஆகும்*
*மதிமலரால் சொன்ன மண்டலம் மூன்றே.*

"அது ஆனால் அது ஆகும் அதுவே சொல்லும்" என்றார் தாயுமானர். மதிமண்டலம் உச்சிக் கமலத்தில் உள்ளது.

உன்மினி சமினி என்ற இரண்டு சக்தி மண்டலங்கள் அதனருகே யுள்ளன; அதுவே சிவனிருக்கை; கைலை. அதில் மூல குண்டலிக்கனல் ஏறிக் கலத்தல் வேண்டும்.

*ஆறுருவி ஏழேறி ஆனந்தத் தேனுண்ணும்*
*சீறியெழும் ஆதாரத் தீ...*

இந்தக் கலப்புத்தான் தூய திருமணம்—அருள் மணம் ஆகும். தூய சிவசக்தியே முத்திக்கு நாயகி. திருமூலர் விளக்கு கிறார் கேட்போம்.

*சக்தி என்பாள் ஒரு சாதகப் பெண்பிள்ளை*
*முத்திக்கு நாயகி என்பது அறிகிலர்.*

மகாகுண்டலி சக்தியைச் சுழிமுனைத் தியானத்தால் அறிந்து பேரின்பச் சிலிர்ப்புப் பெறலாம். இந்தச் சாதனம் காமவெறியர் உணர்வதன்று. இவ் வெறியர் தோற்பாவைகளைக் கூடி விந்தை இழந்து, சிந்தை மெலிந்து, நோய்பிண்டங்களாகிச் சாகின்றனர். இவர்கள் வெறி நோய்க்குத் திருமூலர் சூடு கொடுக்கிறார்:

*பத்தியைப் பாழில் உகுத்த அப் பாவிகள்*
*கத்திய நாய்போற் கதறுகின் றாரே.*

இதைக் கேட்ட கோவிந்தர் தாம் தந்திர சாதன வழியிற் பட்ட இடர்க் கொடுமைகளை உருக்கமாகச் சொன்னார்கள். திருமந்திரக் கருத்தை இன்னும் இன்னும் என்று அறிஞர் பருகினர். சிவசக்தியை உள்ளே வைத்துச் சமாதிநிலை பெறும் வழியைத் திருமூலர் விளக்குகிறார் கேண்மோ?

*சிந்தையில் வைத்துச் சிராதியிலே வைத்து*
*முந்தையில் வைத்துத்தம் மூலத்தி லேவைத்து,*
*சிந்தையில் வையா வினைவதிலே வைத்துச்*
*சந்தியில் வைத்துச் சமாதிசெய் வீரே.*

சந்தியென்பது மூலகுண்டலி உச்சியில் சிவனைச் சந்திப்பதாகும். இது யாருக்கு விளங்கும்? எனது யான் என்னும் அகந்தையில்லாமல், ஆண்பெண் சிவசக்தி என்று அறிந்து வணங்கும் அடியார் (அடிக்கனலை உபாசிப்பவர்) இந்த யோக சாதனம் செய்ய உரியவராவார்.

பெண்ணைப் பராசக்தியாக வணங்க வேண்டும்; காம வாசனை கட்டோடொழிந்து சிவாகமம் சிந்தையில் ஊற வேண்டும். அமுதநாடி ஓட்டம் அறிய வேண்டும், அமுததாரணை செய்ய வேண்டும். அதற்கு அந்தர் பிராணாயாம சாதனமும் சுக்கியத்தியானமும் வேண்டும். அடிக்கமல சக்தியை உச்சிக் கமலத்திற்கு ஏற்றிச் சுத்த சக்தியின்பம்

நுகர வேண்டும். பிராணதாரணையால் ஆக்ஞா சக்கிரத்தில் ஒளிகாண வேண்டும். அந்த ஒளியால் சகசிராரத்தில் சிவனைக் கண்டு கலக்க வேண்டும். நாதவிந்து கலாதீதமான சுத்த சிவசக்தி மனோன்மணியின் ஆனந்த நடனம் அங்கே உணர்வாகும். இந்த நுட்பத்தையே "ஆனந்த நடனம் ஆடினாள்" என்ற காம்போதி கீர்த்தனையாகப் பாடினேன். அஃது இசைத்தட்டாகிப் பரவி வருகிறது. இந்தச் சுத்த சக்தி யோகம் பயில எனக்கு ஞானசித்தர், அரவிந்தர் போன்ற மகான்களின் உறவு கிடைத்ததும் திருவருளே. இதைத்தான் ஞானசம்பந்தர்

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
பெண்ணின் நல்லாளுடன் பெருந்தகை இருந்ததே"

என்கிறார். திருமுறைப் பாசுரங்களில் சுத்தசக்தி தாந்திர ரகசியங்கள் விரவிக் கிடக்கின்றன. ஒரு மந்திரத்தைக் காண்போம்!

பாகம் பராசக்தி பைம் பொன் சடைமுடி
ஏகம் இதயம்; ஈரைந்து திண்புயம்
போகமுகம் ஐந்து முக்கண் முகந்தொறும்
நாக முரித்து நடஞ்செய்யும் நாதர்க்கே;

ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோ ஜாதம் என்று சிவனுக்கு ஐந்து முகங்கள். இந்த ஐந்திற்கும் நம: சப்தம் சேர்த்து ஈசாநாய நம:, அகோராய நம:, தத்புருசாய நம:, வாமதேவாய நம: சத்யோஜாதாய நம: என்ற ஐந்து மந்திரங்கள் உண்டு. ஆதிசக்தி, பராசக்தி இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்திகள் சுத்தசக்தி சிவனிடம் எழுந்து உலகாடலை நடத்துகின்றன. நாகம் என்பது குண்டலிப் பாம்பு; இஃது இடா பிங்களா சுழுமுனைக்கண் உரிமையுடன் நடஞ்செய்யும். இத் திரு நடத்தையும் உள்ளே ஓங்கார நாதத்தையும் கேட்டு அதில் ஆழ்ந்த சுத்தசக்தி யோகிகளே நாதாக்கள் ஆவார்.

"சத்தியினோடு சயம்புவும் நேர்படில்
வித்தது வின்றியே எல்லாம் விளைந்தன"

மூலாதார சக்தி, சகசிராரசிவமுடன் கூடினால் நமது சங்கற்ப வித்தின்றியே எல்லாம் விளையும்; இதைப் பாரதசக்தி மகா காவியத்தில் ஐந்து காண்டங்களில் விளக்கிப் பாடியுள்ளேன்.

நூமதாந்திரயோகி அனகாரிக கோவிந்தர் ஐரோப்பியர் அனைவரும் கருத்துடன் கேட்டு, அன்று முதல் திருமந்திர

யோகப் பேச்சில் மன மூன்றினர்........நம்மவர் விழித்தெழுவார் களா...? திருமந்திரம் ஆங்கில விளக்கத்தை உலகம் எதிர் பார்க்கிறது. அதைச் சிறந்த முறையில் எழுதி உலகிற்குத் தருவது என் வாழ்வுக் கடமைகளில் ஒன்றாகும்.

## 15. அனைத்துச் சமய குழு

டர்பானில் எல்லாச் சமயங்களும் இணைந்து வாழ வழி வகுக்கும் Inter Relegions League அனைத்துச் சமயக்குழு உள்ளது. அதில் மிகச் சிறந்த அறிவாளர் உறுப்பினராகி வாரக் கூட்டம் நடத்துகின்றனர். அவர்கள் என் தலைமையில் ஒரு கூட்டம் நடத்தினர். அதில் எனது ஒருமைப்பாட்டை முழக்கினேன். இந்து மதம் ஏகம் ஸத் (உள்ளது ஒன்றே) என்கிறது; ஒருவனே போற்றி என்கிறது; கிறித்து சமயம் தந்தாய், இஸ்லாம் இறைவர், பௌத்தம் பகவான் என்கிறது. உலகில் ஒரு தீர்க்கதரிசியைச் சுற்றி வளர்ந்த சமயங்களே அதிகம். வேதாந்தம் தன்னைச் சுற்றி "நான்சாமி" என்பது. சித்தாந்தமே சீவனுக்குள்ளே சிவமணம் நுகர வழி காட்டுவது எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி யிரங்கச்செய்வது; எங் கெங்கு பார்த்தாலும் எவ்வுயிருக்கும் அவ்வுயிரான கடவுளை உணரச் செய்வது என்று தாயுமானர் பராபரக் கண்ணியைக் கொண்டு பேசினேன்.

> "என்னதுயான் என்னலற்றோர்
> எங்கிருந்து நோக்கினும்
> சந்நிதியாம் நீ பெரியசாமீ பராபரமே"

என்பதை விளக்கினேன். யகோவா என்பதும் ஏகசிவா என்றேன். என்னிடம் அன்புமிக்க ஒரு வெள்ளையர் நல்ல ஆராய்ச்சியாளர். அவர் ஏசுநாதர்கூட சைவசாது என்ற ஆராய்ச்சியிற் புகுந்தார். 21-1-1938ஆம் ஆண்டில் பம்பாயில் புகழ்பெற்ற ஓவிய வார இதழில் (Illustrated Weekly) A. R. S. ராய் என்பவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையைக் காட்டிப் பேசினர். அதில் ஏசுநாதர் சைவநாதத் துறவி' என்றிருந்தது.

"ஏசுநாதர் அழகும் அமைதியும் அன்பும் பொலியும் அருளான்மா. அவரை நேரே பார்த்த லெந்துலஸ் (Lentulas) எழுதியிருக்கிருர். ஏசுநாதர் ஈசானி வகுப்பினர் என்று நோடோவிட்சு (Notovitch) என்ற ரஷ்யப் புலவர் கூறுகிருர். இவர் அராபியா, எகிப்து, சிரியா, துருக்கி முதலிய நாடுகளின் ஏடுகளை ஆய்ந்துரைக்கிருர். ஈசானர் எங்காடி என்ற காட்டில்

இருப்பவர். ஏசுநாதர் பதின்மூன்று வயது முதல் பதினேழாண்டுகள் (30 வயது வரையில்) பாரத நாட்டில் வேதாகம நூல்களைப் பயின்றார்; பிறகு திபேத்தில் பௌத்த சமயத்தை ஆராய்ந்தார். டாக்டர் நோடோவிட்சு திபேத்து சென்று ஏசுநாதர் பதினேழாண்டுகள் வாழ்ந்த வகையைக் கண்டு பிடித்தார். லாமாக்கள் ஒரு சுவடியைக் காட்டினர். அதில் ஏசுநாதர் கையெழுத்துள்ளது. அந்தச் சுவடியை மூன்று படியெடுத்து ரஷ்யாவுக்கு வந்தார். டாக்டர் நோவோவிட்சு அதை பிரெஞ்சிலும் மொழி பெயர்த்து வெளியிட்டார். ரோம் சென்று போப்பிற்கும் ஒருபடி யளித்தார். ஆனால் போப் அதை எரித்து விட்டாராம். நாற்பது ஆண்டுகள் ஆராய்ந்து இப் புலவர் ஏசுநாதரின் பதினேழாண்டுகள், இந்தியாவிலும் திபேத்திலும் சென்றன என்று கண்டார். ஏசுநாதர் மணம் புரியவில்லை; பிரமசாரியாகவே இந்தியாவுக்கு வந்து சமணருடன் சில மாதங்கள் இருந்தார். இருபது வயதில் அவர் காசியிலும் பூரியிலும் வேதங்களையும் மிருதிகளையும் பயின்றார். அவர் துறவறம் பூண்டு சாதுக்களுடன் காசி, ராசக்கிரகம், பிரயாகை முதலிய இடங்களில் இருந்து புத்த நூல்களைப் பயின்று, நேபால் வழியே திபேத்து சென்று புத்தபிக்குவானார். அவர் நாதமுனிவருடன் இருந்து சைவம் பயின்றார். ஏசுநாதர் என்பது நாதமுனிவர் தந்த பெயர். அவரைச் சிலுவையிலிருந்து ஒரு நாதமுனிவரே எடுத்து வந்து மருந்து போட்டுப் புண்ணாற்றினார். ஏசுநாதர் இமாலயத்தில் சிவ மடத்தில் இருந்து 49ஆம் வயதில் இயற்கை எய்தினார். ஈசு என்பது ஈசன் சிவன். ஈசானர் சிவமுனிவர். ஈசு என்பதே ஏசு ஆனது. கிறிஸ்து என்பதும் கிருஷ்ணன் என்பதன் திரிபே. வங்காளிகள் கிருஷ்ணனை கிருஸ்தோ என்பர். ஏசுநாதர் சைவம் வைணவம், பௌத்தம், சமணம் எல்லாம் கற்றே பேசினார்.

சுவாமி இராமதீர்த்தர் காசுமீரில் சுற்றித் தாம் கண்ட செய்திகளை சான்பிரான்ஸிஸ்கோவில் செய்த ஒரு சொற்பொழிவில் 5-2-1903இல் இவ்வாறு பேசினார்: "கிறிஸ்து சிலுவையில் இறக்கவில்லை. அவர் சமாதியில் இருந்து மூன்றாவது நாள் இமாலயத்திற்கு ஓடி வந்து, காசுமீரில் வாழ்ந்து இறுதி எய்தினார். அங்கே ஏசா-கீ-கபர் (Eesa-ki-Kaber) என்ற சமாது உள்ளது. இந்தியாவில் ஏசா-க-மலாம் (ஏசுத்தைலம்) என்றுள்ளது. இத் தைலத்தாலே சிலுவைப் புண்ணைத் தீர்த்து ஏசுநாதர் காசுமீரில் வாழ்ந்தார்"

இதே கட்டுரை அண்மையில் Organiser என்ற இதழ் ஏழாம் பக்கத்தில் வெளிவந்துள்ளது. இச் செய்தியை எதற்

காகச் சொன்னோம் என்றால் ஏசுவுக்கும் இந்தியாவுக்கும் உறவுள்ளது என்பதற்காகவே. பைபிளில் திருமுறைக் கருத்துக்கள் பொதிந்துள்ளன. நமது சமயத்தையும் அப்படி நாம் வளர்க்க வேண்டும்.

இவ்வாறு பல அறிஞர் உறவால் பல புதிய கருத்துகள் எனக்குக் கிடைத்தன. எச்சமயமானாலும் இரண்டு கொள்கைகள் அனைத்தையும் பிணைத்து நிற்கின்றன. அன்பின் வழியது உயிர்நிலை; அறந்தான் வருவதே இன்பம்; உள்ளத்தில் அன்பும், உலகில் தொண்டும் இருந்தால் எல்லாச் சமயத்தினரும் ஒரே குலமாக வாழலாம்.

### வடநாட்டார் முன்னேற்றம்

ஆப்பிரிக்காவில் வடநாட்டார் நன்றாக ஊன்றிச் செழிக்கின்றனர். பூலாபாய் மேதநபடேல் கிரிதர்லால் போன்ற குஜராத்திகள், குஜராத்து மன்றம் கண்டு தமது மொழியை வளர்க்கின்றனர். மார்வடிகள் இந்தியை வளர்க்கின்றனர்; வடநாட்டார் அனைவருமே இந்தி கற்கின்றனர். குஜராத்து மன்றம், ஆரிய சமாஜம், இராம மந்திரம், அனைத்திலும் நான் இந்தியிலே பேசினேன்; வேத வேள்வியாற்றினேன். Veda Sadhana என்ற எனது நூலை அனைவரும் விரும்பினர். அதில் சமுஸ்கிரத மூலமும் ஆங்கில மொழி பெயர்ப்பும் உள்ளது. இந்து சமயத்திற்கு ஒரு பைபிள் போன்ற அந்நூலை முறையாக அங்கே படிக்கின்றனர். ஆரிய சமாஜத்தில் எனது சொற்பொழிவுகள் ஐந்து தடவை நடந்தன.

இராம கிருஷ்ணமடம் மிகச் சிறப்பாக நடக்கிறது. சிவபாதனந்தர் என்ற துறவி அதைச் சிறப்பாக நடத்துகிறார். அங்கே இரண்டு நாட்கள் பாமறைம்ஸ்—விவேகானந்தர் பற்றிப் பேசினேன். அனைத்திலும் அற்புத ஒழுங்குடன் நடப்பது சிவானந்த ஆசிரமம். சுவாமி வேங்கடேசானந்தர் தென்னாப்பிரிக்காவில் சிறந்த கீதைத் தொண்டு பரவி அனைவர் உள்ளத்தையும் ஈர்க்கிறார். வெள்ளையர் பலர் இவரைக் குருவாக ஏற்றுப் போற்றுகின்றனர். அவர் எனக்கு அரிய துணை புரிந்தார். டர்பான் டார்மெர்டன் என்ற இடத்தில் சுவாமி சகசானந்தர் மிகப் பெரிய ஆசிரமம் அமைத்து சிவானந்தர் நூல்களைச் சொக்கழகாக வெளியிட்டு வருகிறார். இலட்சம் படிகளுக்கு மேல் பகவத்கீதையை வெளியிட்டு உலகெங்கும் பரப்பியுள்ளார். இதற்கென லைனோ அச்சும், மிக விரைவாக அடித்துத் தள்ளும் ஆட்டோமெடிக் அச்சுப் பொறியும் அமைத்

துள்ளார். நூல்களைப் படம் பிடித்து அச்சுப் பொறியில் இணைத்துக் காயிதத்தை அடுக்கி வைத்துவிட்டால் அஃது அடித்து முடித்து மடித்துத் தைத்துத் தந்து விடுகிறது. என் நூல்களையும் அவர் வெளியிடுகிறார். அத்தகைய ஏற்பாடு சென்னையில் இருந்தால் அற்புதமான நூல்களைத் தமிழருக்கும் இந்தியாவுக்கும் தரலாம். சிவானந்த ஆசிரமத்தில் பத்துச் சொற்பொழிவுகள் ஆற்றினேன்.

சுவாமி சகசானந்தர் அடக்கமும் ஆற்றலும், தூய்மையும், வாய்மையும் கொண்ட உண்மைத் துறவி. அவர் என் சொற்பொழிவுகளுக்கெல்லாம் வந்து கருத்துடன் கேட்டார்.

டர்பானைச் சுற்றிப் பல சங்கங்களும் பள்ளிக்கூடங்களும், சமய நிலையங்களும் உள்ளன. அனைத்திலும் என் சொற்பொழிவுகள் நடந்தன. அழகான கடற்கரைப் பாக்கமான டோங்காட்டு, ஸ்ட்ராங்கர் முதலிய ஊர்களில் இசைக் கருவிகளுடன் மணிவாசகர் கதை செய்தேன். ஆங்கிலத்தில் "சேரவாரும் செகத்தீரே, ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்பது பற்றிப் பேசினேன் எல்லாச் சமயத்தினரும் வந்து கேட்டனர்.

பீடர் மோரிடஸ்பர்கு, தென்னாப்பிரிக்காவின் தலைநகர் ஆகும். அங்கேதான் காந்தியடிகள் சத்தியப்போர் தொடங்கினார். லேடிஸ்மித் என்ற இடத்திலிருந்து சத்தியப்படை புறப்பட்டது.

பீடர்ஸ்பர்கில் மாபெரும் நகர மண்டபத்தில் எனது சொற்பொழிவு நடந்தது. இசைக்கருவிகள் நன்கு அமைந்தன. சிவஞானபோத சூத்திரங்களைத் திருமந்திரக் கோட்பாட்டுடன் ஆங்கிலத்தில் விளக்கி இடையிடையே தேவாரம் பாடினேன். "Revelation of Meikandar" என்ற நூலில் எனது சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகள் அடங்கியுள்ளன. இந்நூலை அங்கே அழகாக வெளியிட்டுள்ளனர்.

எனக்கு முன்னே சொற்கொண்டர் K. M. பாலசுப்பிரமணியம் தென்னாப்பிரிக்காவில் ஆறு மாதங்கள் தங்கிச் சைவ சித்தாந்த விளக்கம் செய்தார். அவரது தமிழ் ஆங்கிலச் சொற்பொழிவுகளை அன்பர் நாடாப்பதிவு செய்து வைத்துள்ளனர். "உலகெலாம் உணர்ந்து" "வாழ்க அந்தணர்" "பித்தா பிறைசூடி" "மற்றுப் பற்று" "மாசில்வீணை" "சொற்றுணை" முதலிய தேவாரங்களை அவர் மக்கள் மனதில் விதைத்து வளரச் செய்துள்ளார். அவர் தமிழிலும் இடையிடையே ஆங்கிலத்

திலும் பொழிந்த வீராவேசச் சொற்பொழி நாடாக்களைப் பல வீடுகளில் கேட்டு மகிழ்ந்தேன். முதன்மையாக S. V. ஐயர், டாக்டர் M. B. நாயுடு, B. Sc. Hon M. R. A. S. ஆகிய இருவர் வீடுகளிலும் கேட்டு மிக்க மகிழ்ந்தேன். M. B. நாயுடுவும் அவர் மனைவியும் நமது K. M. B-யை வானளாவப் புகழ்ந்தனர்.

நான் அங்கிருந்தபோதுதான் சாது பித்துக்குளி முருகதாஸ் அங்கே வந்து நாமாவளி யிசைத்து மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தார். அவர் இசையரங்குகளுக்கு என்னை அழைத்துப் பேசச் சொன்னார். எத்தனையோ சைவ, வைணவக் கோவில்களில் இருவரும் பாடினோம், பேசினோம். அவருடன் வடிவேலு, ஐயர் இருவரும் மருதங்கம் வாசிக்க வந்தனர். இவர்களுடைய ''தரிகிட தகஜுனு தாளாங்குதக ஜிமிதோம்'' சடசடக் கை தட்டலை ஊக்கின. இவர்களை அழைத்து வந்த சாத்தையா, முதலி முதலியவர்கள் நல்ல பணக்காரர்கள். இசை விருந்துக்கு இருபது முப்பதென்று நுழைவுச்சீட்டு வைத்ததில் பணம் குவிந்தது. முருகதாஸ் பல பரிசுகளைச் சுமந்து தாய்நாடு திரும்பினார். பிறகு திரைப்புகழ் சௌந்தரராசனும் அதன் பிறகு ஜெமினி கணேசனும் தென்னாப்பிரிக்கா போந்து மக்களுக்குக் கலைவிருந் தளித்தனர்.

நேட்டால் பல்கலைக் கழகம், கல்லூரிகளில் எனக்கு மீண்டும் யோக-விஞ்ஞானச் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றனர் அறிஞர்.

இனி நாம் தென்னாப்பிரிக்காவின் மிகச் சிறந்த பட்டணமான நன்னம்பிக்கை முனையை நோக்கிச் செல்வோம். இதோ உந்து வண்டி ''பூம் பூம்'' என்று அழைக்கிறது.

(தொடரும்)

# தமிழும் மலையாளமும்

[பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு, எம்.ஏ.,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை]

(முன் பரல் சஙஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## தொன்மைக் கூறுகள்

தமிழில் காணப்படாத மூலத்திராவிட மொழியின் இயல்புகள் மலையாளத்தில் இன்றும் காணப்படுவதாகச் சொல்லுகின்றனர். அவ் வியல்புகளை ஒலியனியியல், சொல்லமைப்பியல் துறைகளைச் சார்ந்தனவாகும்.

தமிழிற்கும் மலையாளத்திற்கும் இடையே ஒலியமைப்பியல் (Phonology) துறையில் பலவகையான வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவை யாவும் மலையாளம் தொன்மையான இயல்புகளைப் போற்றி வருகிறது என்பதைத் தெரிவிக்கின்றன என்பர்.

## ஒலியமைப்பில் சிறப்பியல்புகள்

தென்திராவிட மொழிகளின் ஒலியமைப்பில் காணப்படும் நால்வகைச் சிறப்பியல்புகள்:

(1) ஞகர ஒலியன்

(2) இகரம் எகரமாக மாறுதல்

(3) உகரம் ஒகரமாக மாறுதல்

(4) இகரத்திற்கு முன்னர் வரும் ககரம் சகரமாதல்

(5) லகர ககரப் புணர்ச்சி

இவற்றுள் உயிரொலிகளின் மாற்றத்தை டாக்டர் கால்டுவெல்[1], சுப்பையா[2], சிரீகண்டையா[3], பர்ரோ[4],

---

1. Caldwell, R: op. cit., pp. 77-79.
2. Subbayya, K. V: Primer of Dravidian Phonology, Indian Antiquery, Vol. 38, 1909; p. 161.
3. Srikanthiyya, T. N: The Mutation of I. U. E. and O in Karnada Procds. and Pransactions of Eighth All India Oriental Languages Conference, Mysore, 1953; pp. 769-800.
4. Burrow, T: Dravidian Studies, II, BSOS, Vol. 10: pp. 289-97.

முதலானோர் நன்கு விளக்கியுள்ளனர். அண்மையில் டாக்டர் Bh. கிருஷ்ணமூர்த்தி இம் மாற்றங்களை மிக விரிவாகத் தெளிவுறுத்தியுள்ளார்.[1] டாக்டர் எமனோவும் இவ் வியல்புகளுக்குப் புத்தொளி தந்துள்ளார்.[2] இவற்றுள் இகரத்திற்கு முன்னர் வரும் ககரம் சகரமாகத் திரிவது தென் திராவிட மொழிகளுள் மலையாளத்தில் மட்டும் அல்லாமல் தமிழிலும் காணப்படுகிறது.

| தமிழ் | மலையாளம் |
| --- | --- |
| கீரை | சீரை |
| செய் | கை |
| செம்பு | கெம்பு |

இவ்வாறு ககரம் சகரமாக அண்ணச்சாயல் பெறுவதை மூலத் தென்திராவிட மொழியின் கூறாகக் கூறுவர் கமீல் சுவலெபில். சிறப்பாகத் தமிழ்-மலையாள மொழிகளுக்குரிய தனிப்பண்பு என்பது அவருடைய கருத்து.[3]

மூ(லத்) தமிழ்

இலக்கியத் தமிழிற்கு முற்பட்ட நிலையில்

பழந்தமிழில்

இடைக்காலத் தமிழின் தொடக்க நிலையில்

தமிழ் | மலையாளம் | தொடர் மொழி

மேற்கண்ட விளக்கத்திலிருந்து, இவ்வியல்பு மலையாளத்திற்கு மட்டும் உரியதன்று என்பது புலனாகின்றது. மலையாளம் தமிழிலிருந்து பிரிந்தபொழுது தாயிடமிருந்து பெற்ற மரபு வழிப்பண்பே ககரம் சகரமாகத் திரிதல் என்று நாம் உறுதியாகக் கூறலாம்.

1. Krishnamurti Bh : Alternations i/e and u/o in South Dravidian, Language, Vol. 34, 1958, pp. 458-68.
2. Emeneau. M. B : op. cit.
3. Kamil Zvelebil : Comparative Dravidian Phonology, Monton, The Hague, 1970 ; p. 14.

## ஞ

திராவிட மொழியின் ஒப்பியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டோர் 'ஞ'கரம் எனும் ஒலி தென்திராவிட மூலமொழியில் (Proto-South-Dravidian) காணப்பெறும் இயல்பாகக் கூறுகின்றனர்.[1] இவ்வியல்பு தமிழிலும் மலையாளத்திலும் சிறப்புற்று விளங்குகிறது. இவ்வியல்பு பழைய (சங்கத்) தமிழில் மட்டும் பெருவழக்காக இருந்தது. பின்னர் அருகிய வழக்காகி விட்டது. ஆனால், மலையாள மொழியில் இன்றும் இப் பண்பு பெருவழக்காக இருந்து வருகிறது. எனவே, மலையாளமொழி மூலத்திராவிட மொழியிலிருந்து தமிழிற்கு முன்பே பிரிந்திருக்க வேண்டும் என்றும், இதனால் தமிழிற்கு மலையாளமொழி மூத்தவளாக இருக்கவேண்டும் என்றும் வாதிடுவர்.[2]

பழைய தமிழிலேயே மொழிக்கு முதலில் வரும் ஞகரம் நகரமாகத் திரியும் வழக்கு உண்டாயிற்று எனலாம். இடையில் வரும்பொழுதும் அது திரிந்தது.

ஞெகிழ் > நெகிழ் (நற். 193,348)
ஞிணம் > நிணம் (புறம். 177)
ஞிமிறு > மிஞிறு (அகம். 159)
ஞமன் > இயமன் (பரி. 3 : 21)
ஞெமன் > ஞமன் > சமன் (அகம். 349)
பைஞ்ஞிலம் > பைந்நிலம் (புறம். 62-10)

இவற்றைப் போன்று திரியாமல் வழங்கிய சொற்களும் பல உள. ஞெண்டு (அகம் 176, 8; குறுந். 117. 2; 401·3) ஞமலி (புறம். 74·3; அகம். 388·14; குறுந். 179.2; நற்றி 285·5; பட்டினப். 140); ஞாலம் (புறம் 18·2; கலி. 124·1)

காலப் போக்கில் ஞகரம் நகரமாகத் திரிவது தமிழில் பல்கிப் பெருகியது என்பது உண்மை. பல்லவர் காலத்தின் பிற்பகுதி

---

1. Emeneau, M. B : A Dravidian Comparative Phonology —A Sketch, Mimeograph, Annamalai Uuiversity, 1960; p. 29.
   Krishnamurti, Bh : Telugu Verbal Bases, University of California, Press, Berkeley and Los Angeles, 1961; p. 237.
2. George, K. M : Ramacaritram, p. 75.

யில் ஞகரம் பல்லினமான நகரமாகத் திரிவது பெருவழக்கா யிற்று. தொண்டை நாட்டில் முதன் முதல் தோன்றிய இவ் வழக்குப் பிற்காலச் சோழர் காலத்தில் தென்தமிழ் நாட்டிலும் பரவிற்று என்பர்.[1]

தமிழிலுள்ள 'நான்' என்னும் தன்மையிடப் பெயர் மலை யாளத்தில் 'ஞான்' என்றே வழங்கி வருகிறது. இது மிகவும் தொன்மையான வழக்கு. பிறதிராவிட மொழிகளில் இதனைக் காண இயலாது.[2] நகரம் சங்கத் தமிழில் காணப்படுவதாலும், அது ஞகரத்தின் திரிபாகக் காணப்படாமையாலும், மலையாளத் தில் ஞகரம் தொன்றுதொட்டு வழங்கி வருவதாலும் 'ஞகரம்' நகரமாகத் திரிந்தமை மிகப்பழைய காலமாகும். அக் காலத்தி லேயே மலையாளம் தனி மொழியாய்ப் பிரிந்திருக்க வேண்டும்[3] என்பர்.

தொல்காப்பியர் யாத்தல் எனும் வினைச்சொல் ணகர னகர மூக்கொலிகளை யடுத்து ஞகரமாகத் திரிதலைச் சுட்டியுள்ளார். இலக்கணம் உணர்த்தும் உண்மை

ணனவென் புள்ளிமுன் யாவும் ஞாவும்
வினையோ ரனைய என்மனார் புலவர்　　(தொல்-எழுத்-146)

உரையாசிரியர்கள் யாத்தல் எனும் ஒரு சொல்லைத் தவிர, மற்றச் சொற்கள் யாவும் இவ்வாறு திரிவதில்லை என்று குறிப் பிட்டுள்ளனர்.[4] எனவே இத் திரிபு ஒரு கிளைமொழி (Dialect) வழக்காக வழங்கி, தொல்காப்பியருக்குப் பிறகு மறைந்து விட்டது போலும். பவணந்தியாரும், பிற பிற்கால இலக்கண நூலாரும் இவ்வழக்கு அருகிப் போய் விட்டதாகத் தெரிவித் துள்ளனர்.

ஞகரம் நகரமாக மிகப் பழைய காலத்திலேயே திரிந்து விட்டது என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால், அதன் இரு வகை வடிவங்களும் தமிழில் நெடுங்காலம் வழங்கி வந்ததைக்

---

1. Jayakumari, V: A Study of the Language of the Tamil Inscriptions, from the 7th century to 11the century A.D., Uuiversity of Madras, Un published thesis, p. 102.
2. Govindan Kutty, A: op. cit p. 56.
3. ஷை, p. 57.
4. தொல். எழுத்து. நச்சி. உரை; நன்னூல் 124, விருத்தியுரை.

காணுகின்றோம். சங்க இலக்கியத் தமிழில் நெகிழ் என்னும் சொல்வடிவம் 114 இடங்களிலும், ஞெகிழ் என்னும் வடிவம் 21 இடங்களிலும் வழங்கியுள்ளமை[1] இங்குக் குறிப்பிடத் தக்கது. இதைப்போன்றே ஞிணம்—நிணம், மிஞிறு—ஞிமிறு போன்ற சொல்வடிவங்களும் பல இடங்களில்[2] பயன்படுத்தப் பட்டுள்ளன. இதனால், தமிழில் இவ்வியல்பு நெடுங்காலம் நிலைத்த பண்பாக இருந்து வந்தமை தெரிகிறது. 'யான்' எனும் சொல் 'நான்' என்று திரிந்து வழங்கியதைப் பரிபாடலி லும் சிலப்பதிகாரத்திலும் முதன் முதலாகக் காணுகின்றோம்.[3]

இடைக் காலத்திய இலக்கண நூல்களான வீரசோழியமும் நன்னூலும் அண்ணவொலிகளை அடுத்து நகரம், ஞகரமாகத் திரிதலைத் தெரிவிக்கின்றன. பவணந்தி முனிவர் இத் திரிபினைப் போலி என்பர். ஆனால், இதை ஒரு விதியாக அவர் வரையறுத்துக் கூறவில்லை. என்மரும் உளரே என்று குறிப் பிடுகிறார்.[4]

ஐ

*ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி*
*ஞஃகான் உறழும் என்மரும் உளரே.* (நன். 124)

இவற்றால், தமிழின் தொன்மைக் காலம் முதல் சற்றேறக் குறைய கி. பி. 1000 (மலையாளம் கிளைமொழியாகக் கிளைக்கத் தொடங்கிய காலம்) வரையில், இலக்கிய வழக்கிலும் உலக வழக்கிலும் ஞகரம் பெரு வழக்காக இருந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. பின்னர், தமிழின் தொன்மையான இயல்பு ஒன்று அதன் கிளை மொழியில் நிலைத்த வாழ்வு பெற்று விட்டது. தமிழில் உண்டான வளர்ச்சியும் திரிபும் அதை விட்டுப் பிரிந்து போன மலையாளத்தில் உண்டாகவில்லை. இலக்கண மரபிலும், சொற்பொருளியல் துறையிலும் அதனை ஒருவகைக் கலவை (மணிப்பிரவாள) மொழியாக்கிய காலத்தில் அதன் வளர்ச்சி குன்றி, ஒரு தேக்கநிலை உண்டாயிற்று.

---

1. *சங்க நூற் சொல்லடைவு: பிரெஞ்சு இந்தியக் கலைக்கழகம், புதுச்சேரி. 1967, 1968, 1970; பகுதி 1, பக். 919-920; பகுதி 2, பக். 695.*

2. *ஷை பகுதி 3; பக். 694, 873&1241.*

3. *பரிபாடல் 6 : 87, 20 : 82; சிலப். 29-2-4-5; 29-3-4, 29-4-45; 29-10-2.*

4. *நன்னூல் விருத்தியுரை 124.*

அந்நிலையிலிருந்து விடுபட்டு, முன்னேற்றம் காண்பதற்கு முன்பே, பழைய இயல்புகள் சில மலையாள மொழியில் கல்மாறிகளாக (Fossils) ப் போய்விட்டன என்று கூறின் தவருகாது.

ல

மலையாள மொழியில் — லக —புணரும்பொழுது திரிபின்றி நிற்கின்றன. இவ்வியல்பு இன்றும் மலையாளத்தில் காணப்படுகிறது. இப்பண்பு தமிழில் காணப்படாமையால் மலையாளம் மூலத்திராவிட மொழியிலிருந்து வரலாற்றுக் காலந் தொடக்கத்திற்கு முன்பே பிரிந்து, தனித்த இயல்புடையதாக வளர்ச்சியடைந்திருக்க வேண்டும் என்பர்.[1] லகரமெய் தமிழில் கீழ்க் காணும் சூழல்களில் வழங்கி வருகிறது.

(1) உயிரிடை :-ல் (vlv)

(2) மொழியிடை :-ல்ல்

இரட்டித்தல்

(3) மொழியிறுதி :-ல்

(4) மெய்முன் :-ல் க்-, ல்ப்,-ல்வ்- (clc)

இவற்றுள் ககர மெய் முன் வரும் லகரம் - ல்க் - என்னும் புணர்ச்சியில் லகரம் நகரமாகத் திரியுமெனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

*லன என வரூஉம் புள்ளி முன்னர்த்*
*தந வரிற்றன வாகும்மே.* (*தொல். 149*)

மேலும் வேற்றுமைப் புணர்ச்சியில்,

*லகார இறுதி னகார இயற்றே* (*தொல். 366*)
*மெல்லெழுத்து இயையின் னகார மாகும்* (*தொல். 367*)

என்றும்,

*அல்வழிப் புணர்ச்சியில்*
*அல்வழியெல்லாம் உறழெின மொழிப* (*தொல். 368*)

என்றும் திரியுமெனக் குறிப்பிட்டுள்ளார். அல்வழியில் லகரம் ககரமாகத் திரிதலைக் காணலாம்.

---

1. Indo-Iranian Journal, or cit. p. 59.

(எ - டு.)

நல் + கு > நற்கு (நற்றி. 19·9)

கொல் + கை = கொற்கை (நற்றி. 23·6)

சுவல் + கலித்த = சுவற்கலித்த (குறுந். 204·3)

ஆனால், தொல்காப்பியர் லகர ககரப் புணர்ச்சியில் லகரமும் ககரமும் திரிபின்றிப் புணர்ந்து நிற்பதைக் கூறவில்லை. எனினும், சங்கத் தமிழில் இவ்வியல்பு இடம் பெற்றிருந்தமைக்கு நாம் பின்வரும் பாடற்பகுதிகளைச் சான்றாகக் காட்டலாம்.

நல்நால்கு பூண்ட கடும்பரி நெடுந்தேர் (அகம். 104)
வளைகண் டன்ன வாலுளைப் புரவி
துணைபுணர் தொழில நால்குடன் பூட்டி (பெரும்பாண். 84)

நான்கு எனும் எண்ணுப்பெயர், பழைய தமிழில் மட்டும் அல்லாமல், இன்றைய கன்னடத்திலும் நால்கு எனவும், தெலுங்கில் நாலுகு எனவும் வழங்கி வருவதைக் கால்டுவெல் சுட்டிக் காட்டியுள்ளார்.[1] ஆனால், மலையாளத்தில் நால் நாங்கு (ஙங்கு) என்னும் வடிவங்களே வழக்கில் உள்ளன. எனவே, —லக—புணரும்பொழுது திரியாமல் அமைவது மலையாள மொழியில் மட்டும் காணப்படும் சிறப்பியல்பு என்று கூற இயலாது; அதில் பெரு வழக்காக உள்ள இயல்பு என்று மட்டும் கூறலாம். ஆனால், பிற திராவிட மொழிகளிலும் அவ்வழக்கு இன்றும் இருந்து வருகிறது. பழைய தமிழில் இவ்வழக்கு இருந்ததை நாம் மேலே கண்டோம். இதற்குத் தொல்காப்பியர் விதிவகுக்கவில்லை என்பதனால், தமிழிற்கு இது புதுமையான பண்பு எனக் கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை.

———

(தொடரும்)

1. Caldwell, R: op. cit. p. 334.

## மொழி

*மொழி மனித உள்ளத்தின் படைக்கலச்சாலை; அதில் பழம் புகழ்ச் சின்னங்களுடன் வருங்காலப் புகழுக்குரிய போர்க் கருவிகளும் வைக்கப்பெற்றுள்ளன.*

—காலரிட்ஜ்

# பிளெய்னியின் 'தென்னிந்தியா'*

['நூலகர்']

தென்னிந்தியாவில் வாழும் பல்வகை மக்களின் வரலாற்றையும் அவர்களின் பழக்க வழக்கங்கள், வணிகமுறைகள், தொழில் நிலையங்கள் முதலியவற்றின் வரலாற்றையும் அரும்பாடு பட்டுத் தொகுத்து 765 பக்கங்களுடன் பெரிய அளவில் விரிவான நூலொன்றைத் தொகுத்து 1915 இல் வெளியிட்டவர் **சாமர்செட் பிளெய்னி.** அதற்கு முன்னரும் பின்னரும் இந்த நோக்கத்துடன் இவ்வளவு பெரிய அளவில் வேறு எந்த நூலும் தோன்றவில்லையெனலாம்.

இலண்டனிலுள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பயின்ற சாமர்செட் பிளெய்னி கல்லூரிப்படிப்பு முடிந்தவுடன் தம் 19 ஆவது அகவையிலேயே உலகநாடுகளைச் சுற்றிக் காணப் புறப்பட்டார். அது முதல் ஆப்பிரிக்கா, கேப் காலனி, நியூசிலாந்து, இந்தியா, கிழக்காசிய நாடுகள் பலவற்றுக்கும் சென்றார். ஊர் சுற்றுவதையே நோக்கமாகக் கொண்டிருந்த அவருக்கு அவர் சென்ற நாடுகளைப் பற்றி விரிவாக நூலெழுதும் வாய்ப்பு ஒரு புத்தக நிறுவனம் வழியாகக் கிட்டியது. நேடால், இலங்கை, மலேயா, ஆங்காங், சாவா, போர்னியோ, பர்மோசா போன்ற நாடுகளைப் பற்றிய நூல்களை அந் நிறுவனத்துக்காகப் பதித்துக் கொடுத்தார். பின் அதனின்று விலகித் தாமே கிழக்கு ஆப்பிரிக்கா, கேப் காலனி, நியூசிலாந்து, தென்னிந்தியா, பம்பாய் போன்ற நூல்களை வெளியிட்டுள்ளார்.

பிளெய்னி 1913 இல் சென்னைக்கு வந்து இரண்டே ஆண்டுகளில் இந் நூல் தொகுக்கும் அரும்பணியைப் பல பேரறிஞர்களின் உதவியால் முடித்து வெளியிட்டுள்ளதைப் பாராட்டாதிருத்தல் முடியாது. வரலாற்றுத் தொடக்ககால முதல் வெள்ளையர் இந்நாட்டை ஆள வந்தது வரை, தென்னிந்தியாவின் வரலாற்றை 40 பக்கங்களில் செறிவாகவும் சுருக்கமாகவும் அர்னால்டு ரைட் (Arnold Wright) எழுதியுள்ளார். வரலாற்றுத் தொடர்பான சில படங்கள் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன.

---

*Southern India Its history, People, Commerce and Industrial resources compiled. by Somerset Playne. London. 1914-15.

இந்நாட்டுப் பழங்குடி மக்கள், பல்வேறு சாதிப்பிரிவினரின் பழக்கவழக்கங்களையும் வரலாற்றையும் படங்களுடன் இந் நூலில் காணலாம்.

சென்னை, பெங்களூர், மைசூர், கொச்சி, கோவை, மலபார், திருவாங்கூர், சென்னை மாகாணத்தின் தென்பகுதி நகரங்கள் போன்ற நகர்களிலுள்ள வெளிநாட்டு, உள்நாட்டு வணிக நிறுவனங்களில் வரலாறுகளை அவற்றுக்குரிய கட்டிடங்கள், தொழிற்சாலைகள் படங்களுடனும் அவற்றைச் சிறப்பாக நடத்தி வரும் உரிமையாளர்களின் படங்களோடும் பிளெய்னி இந் நூலில் வெளியிட்டுள்ளார். அவற்றில் பல நிறுவனங்கள் இன்று இல்லையாயினும் இன்றுள்ள பல பழைமையான தொழில் நிலையங்களின் வரலாற்றை இந்நூல் வழி நன்கறிந்து கொள்ள முடிகின்றது. சுருங்கக் கூறின் 1915 ஆம் ஆண்டை யொட்டித் தென்னிந்தியாவில் நிலவி வந்த தொழில்நிலை, பொருளாதார நிலை ஆகியவற்றை உணர்ந்துகொள்ள இந் நூல் பெரிதும் உதவுகிறதெனலாம்.

அச்சமயம் காணப்பட்ட செடிகொடி நிலைகளைப் பற்றியும் விலங்கின வகைகளைப் பற்றியும் சுருக்கமாக எடுத்துக்கூறும் இரு கட்டுரைகளும் இந் நூலிலுள்ளன.

இந்நூலில் மிகச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியது 'லுவின்' எழுதியுள்ள 'தென்னிந்தியாவைப் பற்றிய நூல்கள்'* என்ற கட்டுரையேயாகும். இது நான்கு பக்கமே கொண்ட தெனினும் இதுவரை கேள்விப்பட்டிராத பல நூல்களைப் பற்றிக் கட்டுரையாசிரியர் இதில் குறிப்பிட்டுள்ளார். அவற்றில் சில பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற பிறமொழி நூல்களாகும். இத் தகைய நூல்களைத் தேடித்தொகுத்து வைக்க வேண்டியது தமிழக அரசின் கடமையாகும். பிற மொழி நூல்களுக்கு ஆங்கிலமொழி பெயர்ப்புகளைப் பெற முயலவேண்டும். இவை தமிழகத்தின் கடந்த ஐந்து அல்லது ஆறு நூற்றுண்டுகளின் வரலாற்றை எழுதப் பெரிதும் உதவும்.

அத்தகைய நூல்களில் ஒரு சிலவற்றின் பெயர்கள் மட்டும் கீழே கொடுக்கப் பெற்றுள்ளன.

History of India (6 Vols)—James Mill (1830).

Ledger and Sword (2 Vols)—Beckles Willson (1903),

The Native States of India—William Lee Warner (1910)

India in the fifteenth century—R H. Major.

---

*The Literature relating to Southern India by Evans Lewin.

(Peregrinacam)—Mendez Pinto (1614).
Storia do Mogor—Manurri.

இவையன்றிப் பல அரிய நூல்களைப் பற்றிய குறிப்புகளை இக் கட்டுரையில் காணலாம்.

தென்னிந்தியாவைப் பற்றி அறிந்துகொள்ளப் பெரிதும் பயன்படும் இந் நூலில் தென்னிந்திய மொழிகள், இலக்கியம் ஆகியவைபற்றித் தனித்தனிக் கட்டுரைகள் இல்லாமற்போனமை குறையேயாகும்.

இதன்கண் பதிப்புத்துறையிலும் மருத்துவத் துறையிலும் பணியாற்றிப் புகழ்பெற்ற இரு பெருமக்களைப் பற்றிய குறிப்புக்கள் படங்களுடன் காணப்பெறுகின்றன.

தெலுங்கு நூல்களைப் பெரும்பாலும் அச்சிட்டு வெளிப்படுத்திய **இராமசாமி சாஸ்த்ருலு சன்ஸ்** சமற்கிருத நூல்களிற் சிலவற்றையும் தமிழ் நூல்களிற் சிலவற்றையும் சிறப்புற வெளியிட்டனர். வ. உ. சிதம்பரனார் சிறையினின்றும் விடுதலை பெற்றுப் பெரம்பூரில் தங்கியிருந்தபோது தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணருரையினைத் தம் நண்பர் திரு ச. வையாபுரி பிள்ளை அவர்கள் உதவியோடு **வாவிள்ளா அச்சுக் கூடத்தில்** அச்சிட்டு வெளிப்படுத்தினர். அப் பதிப்புக்கு **வாவிள்ளா வேங்கடேச சாஸ்த்ருலு** எழுதிய முன்னுரையில் முதன் முதல் லோக மான்ய பாலகங்காதர திலகர் தம்மைத் திரு வ. உ. சிதம்பரம் **பிள்ளை** அவர்களுக்கு அறிமுகஞ் செய்து வைத்தனர் என்று எழுதியுள்ளனர். அக் குறிப்பு செந்தமிழ்ச் செல்வி சிலம்பு-45, பரல்-11இல் கழக ஆட்சியாளர் எழுதிய ‘பதிப்புத்துறையிற் பட்டறிவு’ என்ற கட்டுரையின்கண் வெளி வந்துள்ளது. வாவிள்ளா அச்சுக்கூடத்தைப் பற்றிய குறிப்பும் வேங்கடேச சாஸ்த்ருலு படமும் இந் நூலின்கண் காணப்பெறுகின்றன.

தொண்டை, மூக்கு, காது ஆகிய மக்கள் உறுப்புக்களில் ஏற்படும் நோய்களை மருந்து முறையாலும் அறுவை முறையாலும் தீர்க்கும் மிகுதிறமையுடைய **டாக்டர் ஆ. சங்கரநாராயண பிள்ளை** அவர்களைப் பற்றிய குறிப்பும் படமும், பிராட்வேயில் இப்போதும் எழிலுடன் தோன்றும் மருத்துவமனை (Aural Institute) மூன்றடுக்குக் கட்டடத்தின் படமும் காணப்பெறுகின்றன. இப்போது அவர்கள் மூத்த மகனாரும் ஆட்சியாளருடன் படித்தவருமாகிய திரு டாக்டர் சோமாஸ்கந்தன் அவர்கள் மகனார் அம் மருத்துவத்தைச் செய்து வருகின்றனர்.

---

# * பள்ளித் தமிழாசிரியர்கட்குக் கழக ஆட்சியாளர் வேண்டுகோள்

இக் கழகம் கூட்டுப்பங்கு நிறுவன (Public Limited Company) மாக நூற்பதிப்புக்கெனவே 20—9—1920 இல் பதிவு செய்யப்பெற்ற முதல் நிறுவனமாகும். அப்போது தமிழ்மொழி புறக்கணிக்கப்பெற்ற காலமாகும்.

தனித்தமிழில் புலவர் பட்டமோ முதுகலைப் (எம். ஏ.) பட்டமோ பெறமுடியாதிருந்த காலம். பேராசிரியர் கா. சுப்பிர மணியபிள்ளை முதலியோர் மலையாள மொழியையுங் கற்றே தமிழில் எம். ஏ. பட்டம் பெற்றனர். வடமொழியோடு தமிழ் கற்றவர்களே தமிழாசிரியர்களாய் இருந்த காலம்.

பேராசிரியர் **கா. சுப்பிரமணியபிள்ளையவர்கள்** சென்னைப் பல்கலைக் கழகத்துக்குத் தனித்தமிழில் பட்டம்பெற முடியாத நிலையினை 1925 இல் விண்ணப்பத்தின்வழி எடுத்துக் கூற, முதுபெரும் புலவர் சாமிநாதையர் அவர்கள் தமிழ்மொழிக்கு எதிர்ப்பாக இருந்த தம் நண்பர்களைத் தம் வயமாக்கி ஆதரவு கொடுக்கும்படி வேண்டப் பல்கலைக் கழகக் கல்விக்குழுத் தலைவர் **பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார்** தலைமையில் தனித்தமிழிலே புலவர் பட்டமும் எம். ஏ., பட்டமும் பெறலாம் என்ற தீர்மானம் 11—2—1926 இல் நிறைவேற்றப் பெற்றது. ஆதலால் தமிழாசிரியன்மார் அனைவரும் மேலே குறிப்பிடப்பெற்ற பேரறிஞர் மூவர்க்கும் நன்றிக் கடன்பட்டவர்களாவார்கள்.

மறைமலையடிகள் நூல்நிலையம் அமைவதற்கும், அடிகள் வாழ்ந்த பல்லாவரம் மறைமலையடிகள் மாளிகை **கலைமன்றமாக** அமைவதற்கும், அஃதிப்போது சுற்றுலா வருபவர்கள் பார்க்க வேண்டிய கவின்மிகு காட்சிக் கூடங்களில் ஒன்ருகத் தமிழக வரசும், நடுவணரசும் ஏற்றுக் கொள்வதற்கும், அடிகளார் எழுதிய செந்தமிழ் நூல்கள் யாவும் தட்டாமல் கிடைக்கும்படி அச்சிட்டு வெளி வருவதற்கும், அடிகளார் தனித்தமிழ்க் கொள்கை பரவுதற்கும் கழகம் செய்த முயற்சியே காரணமாகும்.

கழகம் நூற்பதிப்பு நிறுவனமாக மட்டுமல்லாமல் மறைமலை யடிகள் நூல்நிலையத்தைத் தொடங்கி நடத்தி வருகிறது. இந் நூல்நிலையம் எம். ஏ., எம், லிட்., டி. லிட். ஆகிய பட்டங்களைப் பெறும் ஆராய்ச்சியாளர்கட்குப் பயன்படும் வகையில் மறைமலை

---

* தமிழ் விடைத்தாள் திருத்திஞேர்களிடம் வழங்கப்பெற்றது.

யடிகள் தொகுத்த 4,000 நூல்களோடு 30,000 நூல்களைக் கழகம் தொகுத்து நற்றொண்டு செய்து வருகின்றது.

கழகம் 500க்கு மேற்பட்ட புலவர் படங்களையும், 2000க்கு மேற்பட்ட புலவர் கடிதங்களையும் தொகுத்து வைத்திருக்கிறது.

பல துறைகளில் 1500க்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டிருப்பதோடு தமிழ், தமிழினம், தமிழ்நாடு ஆகியவற்றின் முன்னேற்றங் கருதி 48 ஆண்டுகளாகச் "செந்தமிழ்ச் செல்வி" (ஆண்டுக் கையொப்பம் ரூ. 8/-) என்ற திங்கள் இதழைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது.

எனவே, தமிழாசிரியர்கள் தங்கட்கும் தங்கள் நண்பர்கட்கும் பள்ளிகட்கும் கழகத்திலிருந்தே புத்தகங்களை வாங்கினால் அஃதொன்றே கழகம் மேன்மேலும் இலக்கண இலக்கிய நூல்களோடு பல துறை அறிவியல் நூல்களையெல்லாம் வெளியிடுவதற்கு வாய்ப்பளிப்பதாகும். மேலும் "செந்தமிழ்ச் செல்வி" திங்களிதழைத் தாங்கள் வாங்குவதோடு தங்கள் பள்ளிகட்கும் வரவழைக்கச் செய்து தமிழ்மொழி வளம்பெறுமாறு செய்ய வேண்டுகிறோம்.

அக் காலப் புலவர்கள் அலைந்து தேடி ஏடுகளைத் தொகுத்துப் பேருழைப்போடு அவற்றை நூல் வடிவில் அச்சிட்டுக் கொணராதிருந்திருப்பின் நாம் எங்ஙனம் புலவராக வந்திருக்க முடியும் என்பதை ஒவ்வொருவரும் எண்ணிப் பார்த்தல் வேண்டும். எனவே அப் பெரும்புலவர் படங்களைத் தங்கள் பள்ளிகளில் நிறுவி விழாக் கொண்டாடுதல் செய்தக்க செயலாகும்.

தமிழிலுள்ள சிறந்த நூல்களையெல்லாம் ஒருசேர வாங்கும் பொருட்டே திருநெல்வேலி, மதுரை, திருச்சி, கும்பகோணம், சென்னை, கோவை ஆகிய பேரூர்களில் புத்தக விற்பனை நிலையங்களைக் கழகம் நிறுவியுள்ளது. இன்னும் சில ஊர்களில் நிறுவவும் திட்டம் உள்ளது.

அரிய நூல்கள், இதழ்கள், புலவர் படங்கள், கடிதங்கள், மணிகள், திருக்கோயிற் படங்கள், தமிழ் மொழி, கலை முதலியவற்றை விளக்கும் அட்டைகள் முதலியவற்றையெல்லாம் தலை நகரங்களில் காட்சி அமைப்பதற்குக் கழகம் தொகுத்து வைத்திருக்கிறது. மேலும் கழகம் எடுத்துக்கொண்ட அறிவுப் பணிகள் நன்கு பெருகி வளரத் தங்கள் உதவியினை அன்போடு நாடும்,

சென்னை—1 அன்பன்,

25—4—1974 வ. சுப்பையா.

# தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலிக்குத் தனித்துறை

தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி தொகுப்பதற்கெனத் தமிழகவரசினர் தனித்துறை ஏற்படுத்தி மொழிப் பேரறிஞர் பன்மொழிப் புலவர் தமிழ் ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களை இயக்குந ராக நான்கு ஆண்டுகள் தகுந்த சம்பளத்திட்டம் ஏற் படுத்தி அமர்த்தியிருப்பது தமிழ் உள்ளங்கட்கெல்லாம் கழிபேருவகை யளிக்கின்றது.



"மொழியாய்வு நூல் எழுதிய பண்டாரகர் கால்டு வெல் அவர்கட்குப்பின் மொழியாராய்ச்சித் துறையில் தொடர்ந்து ஈடுபடக்கூடிய தகுதியுடையவர் எவரா யினும் பின்வரக்கூடுமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந் தேம். அப்போது யாழ்ப்பாணம் திருத்தந்தை ஞானப்பிரகாசர் எழுதிய மொழியியல் ஆராய்ச்சி நூல் ஓரளவு எமக்கு மன நிறைவு அளித்தது. எனினும் மொழியியல் ஆராய்ச்சித் துறை மிகவும் விரிவும் ஆழமுமுடையதாதலால் பழந்தமிழ் இலக்கியங்களைக் கற்று அவற்றைக்கொண்டு நன்கு புரிந்து கொள்ளும் வகையில் மேலும் மொழியியல் ஆராய்ச்சி நூல்கள் வெளிவருதல் வேண்டுமென்று கருதினேம். அந்த நேரத்தில் திரு. தேவநேயனார் யாம் எதிர்பார்த்ததை ஏறத்தாழ முழுதும் நிறைவேற்றியது கண்டு பெருமகிழ் வுற்றேம். அத் துறையில் அவர் மிகவும் உழைப்பெடுத்து ஆராய்ந்து எழுதியிருப்பவற்றைத் தமிழ் அறிஞர்கள் நன்றாக நம்பலாம். சொல்லாராய்ச்சித் துறையில் திரு. தேவநேயனார் ஒப்பற்ற தனித் திறமையுடையவர் என்றும் அவருக்கு ஒப்பாக இருப்பவர் அருமையாகும் என்றும் யாம் உண்மையாகவே கருதுகின்றேம். ஆதலால் அவரைப் பணியில் அமர்த்தும் எந்த நிலையத்துக்கும் அவரால் பேரும் புகழும் கிடைக்கப்பெறும் என்று யாம் முழு நம்பிக்கையோடு கருதுகின்றேம்."

என்று தனித்தமிழில் எழுதவும் பேசவும் கூடும் என்று நிறுவித் தமக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி வாழ்ந்த மும்மொழிப் புலவர் மறைத்திரு மறைமலையடிகளார் 1949-இல் சான்றிதழ் ஒன்று

வழங்கியுள்ளார். அதன் முழுக் குறிப்பையும் செல்வி-சிலம்பு 44. பரல் 4-இல் காண்க.

அதன்பின் 25 ஆண்டுகள் கழித்துத் தமிழால் - தமிழ் வளர்ச்சிக்காகவே ஏற்பட்ட தமிழகவரசு ஆட்சிக்கு வந்து ஏழாண்டுகட்குப் பின் சொற்பிறப்பியல் ஆராய்ச்சித்துறையில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்குபவரும் செந்தமிழ்ச் செல்வியில் வேர்ச்சொற் கட்டுரைகளை முறையாக எழுதி வருபவரும் பல ஆராய்ச்சி நூல்களை எழுதியவருமான மொழிப் பேரறிஞர் தேவநேயப் பாவாணரின் தனித் திறமையினை யுணர்ந்து 'சொற்பிறப்பியல் அகரமுதலி' தொகுப்பதற்கெனத் தனித்துறை ஏற்படுத்தி அமர்த்தியிருப்பது பாராட்டுதற்குரியது. தமிழரெல்லாரும் உள்ள உவகையோடு தமிழக அரசுக்கு நன்றி செலுத்தும் கடப்பாடுடையவராவர்.

''தமிழாய்ந்த தமிழன்தான்
தமிழ்நாட்டின் முதலமைச்சாய்
வருதல் வேண்டும்!
தமிழ்ப் பகைவன் முதலமைச்சாய்த்
தமிழ்நாட்டில் வாராது
தடுத்தல் வேண்டும்
நமை வளர்ப்பான் நந்தமிழை
வளர்ப்பவனும்! தமிழ் அல்லால்
நம்முன்னேற்றம்
அமையாது சிறிதும் இதில்
ஐயமில்லை, ஐயமில்லை
அறிந்து கொண்டோம்.''

என்று புரட்சிப்பாவலர் பாரதிதாசன் 1945-இல் கனவு கண்டபடி தமிழகவரசு தமிழாய்ந்த பெருந்தமிழர் கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் அமைந்தமையும், திரு பாவாணரவர்களைக் கொண்டு சொற்பிறப்பியல் அகரமுதலியை வெளிக்கொணர வேண்டுமென்று தவத்திரு குன்றக்குடியடிகளார் உள்ளத்துடிப்போடு டாக்டர் கலைஞர் அவர்கட்குச் செவ்வியறிந்து எடுத்துரைத்தமையும், 1—5—74 இல் நடந்த பாரிவிழாவிலே அடிகளாரால் டாக்டர் கலைஞர் அவர்கட்குச் 'செந்தமிழ்க் காவலர்' என்னுஞ் சிறப்புப் பட்டம் வழங்கியமையும் இங்கே நினைவுகூர்தற் பாலன.

கழக ஆட்சியாளனாகிய யான் திரு. பாவாணர் அவர்களுடைய மொழிப் பேரறிவினை 1938 முதல் நன்கு அறிந்து அவர்கள் எழுதிய நூல்களைத் துணிவோடு அச்சிட்டும் அவர்கள் தாமே பதிப்பிக்கும் நூல்களை அழகுற அச்சிட்டு வெளிக்கொணரவும் உதவியதோடு, 2—12—1969-இல் கோட்டையில் நடைபெற்ற தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றக் கூட்டத்தில்,

"சொல்லாராய்ச்சி வல்ல அறிஞர்கள் ஓரிருவரை ஆந்திரம், கன்னடம், மலையாளம் ஆகிய திராவிட மொழிகள் பேசும் மாநிலங் கட்கு அனுப்பித் தமிழகத்திலே வழக்கிழந்து அம் மாநிலங்களில் வழக்கிலிருக்கும் தமிழ்ச் சொற்களைத் திரட்டி வெளியிடுதல்"

"தமிழ் வேர்ச் சொல் அகரவரிசை வெளியிடுதற்கு 'அறிஞர் குழு' ஒன்று அமைத்தல்"

என்னும் இரண்டு தீர்மானங்களைக் கொண்டு வந்து, அவற்றைத் தலைமை தாங்கி நடத்துவதற்குத் தகுதி வாய்ந்த திரு. பாவாணர் அவர்களைக் குறிப்பிட்டுப் பேசினேன். அப்போது அவற்றைத் தாங்கிப் பேசுவாரில்லாமல் அவை நிறைவேருமற் போயின.

பின்னர், செந்தமிழ்ச் செல்வியில் அவர்களுடைய வேர்ச் சொற் கட்டுரைகளைத் தொடர்பாக வெளியிட்டு அறிஞர் களிடையே பரப்பி வருகின்றேன்.

செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 48. பரல் 7. (1974 மார்ச்) இத ழில் எனது விருப்பத்தை அடியிற்கண்டபடி எழுதியுள்ளேன் :

"இப்போது காட்டுப்பாடியிலிருக்கும் 72 அகவை சார்பிய மொழிப் பேரறிஞரும் வேர்ச்சொல் அகரமுதலி எழுதி வருபவரு மான தேவநேயப் பாவாணர் அவர்கட்காவது நமது தமிழகவரசோ நம் செல்வர்களோ தக்க புலவர்களை அமைத்துக் கொடுத்து அவர்தம் மனக்குகையில் பொதிந்து கிடக்கும் வேர்ச்சொற் பொருட் குவியலை வெளிப்படுத்துவது தனிப்பெருங் கடமையாகும். இறைவன் அருள்புரிவானாக."

தமியேன் கருதியது நிறைவேறியுள்ளதைக் கேட்க எத்துணை இன்பம் அடைந்திருப்பேன் என்பதும், என் பெருமதிப் புக்கும் பேரன்புக்குமுரிய மாண்புமிகு முதலமைச்சர், டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி யவர்களை எங்ஙனம் வாயார வாழ்த்தி யிருப்பேன் என்பதும், யான் கூருமலே அறிஞர் பெருமக்கள் நன்கு உணர்வார்கள்.

திரு. பாவாணர் அவர்கள் தமக்கு அளித்த சீரிய பணி யினை 8-5-1974இல் ஏற்றுக்கொண்டார்கள் என்பதறிந்து மகிழ்கின்றேன்.

திரு. பாவாணர் அவர்களுடைய அலுவலகம் அமைவதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர், டாக்டர், நாவலர் நெடுஞ் செழியன் அவர்கள் தகுந்த இடத்தை அமைத்துக் கொடுக்கவும், திரு. பாவாணர் அவர்களிடம் சேலம் கல்லூரியில் தமிழ் பயின்ற வீட்டுவாரிய அமைச்சர் மாண்புமிகு க. இராசாராம் அவர்கள் தம் மதிப்பிற்குரிய ஆசிரியர் நிலையாகவே குடியிருப்பதற்குத் தகுந்த இல்லம் அமைத்துக் கொடுக்கவும், உறுதியளித்தமை மிகவும் போற்றுதற்குரியது.

# கழக ஆட்சிக் குழு உறுப்பினர் வித்துவான் வே. மாணிக்கவாசகம் பிள்ளை மறைவு

கழகஆட்சியாளருடன் இந்துக் கல்லூரியில் படித்தவரும், கழக ஆட்சிக் குழுவில் தொடக்க முதல் இடையில் ஒருசில ஆண்டுகள் மட்டுமின்றி நீண்ட காலமாக உறுப்பினராக விருந்து தனி மதிப்பினைப் பெற்றவரும், புலவர் பட்டம் பெற்று நெல்லையில் சாப்டர் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகவும் கழகத்தின் திருவள்ளுவர் புலவர் கல்லூரியில் சில ஆண்டுகள் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றியவருமாகிய சிவத்திரு வித்துவான் வே. மா. அவர்கள் சில நாட்கள் நோயுற்றிருந்து 9-5-1974 இல் தமது 76ஆவது அகவையில் இறையடி சேர்ந்தமை கேட்டு ஆற்றொணாத் துன்பமடைகின்றோம்.



அவர்கள் சைவசித்தாந்த மெய்ப்பொருள் உண்மைகளைப் பெரும் புலவர்களிடம் முறையாகப் பாடங் கேட்டவர்களாவர். நாடோறும் பொருநையாற்றுக்கு நீராடச் செல்வர். இரவு நெல்லையப்பர் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்து வருவர். சிவபூசைச் செல்வர் குழுவில் சிறப்புறுப்பினராவர். ஆட்சியாளர் பிப்ரவரித் திங்களில் நெல்லைக்குச் சென்றிருந்தபோது தம் மூத்த மகனார் திரு. முருகேசனார் தம் பவளவிழாவை வீட்டளவில் மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடியதைத் தமது திருவாய் பொலியச் சொல்லி மகிழ்வுறச் செய்தனர். அவர்களுடைய பிரிவு கழகத்துக்கும் ஆட்சியாளர்க்கும் பேரிழப்பேயாகும். எப்போதும் சிவனடி மறவாச் சிந்தையரானமையால் அவர்களது ஆருயிர் இறையடியில் இன்ப அன்புற்றமரும் என்ற நம்பிக்கை நமக்கு ஆறுதல் தருவதாகும். அவர்கள் குடும்பத்தார்க்குக் கழக உறுப்பினர் அனைவரும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர். அவர்களுடைய விரிவான வரலாறு கழகப் புலவர் வரிசை 31ஆவது புத்தகத்தில் வெளியிடப் பெறும்.

# டாக்டர் இலட்சுமணசுவாமி முதலியார் மறைவு

புகழ்பெற்ற கல்வித்துறை வல்லுநரும், 27 ஆண்டுகள் தொடர்ந்து சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகப் பணியாற்றியவரும் மருத்துவத் துறையில் கருவியல் வல்லுநராக உலகப்புகழ் பெற்றவரும், தமிழகத்தில் அறிவாற்றல்களில் புகழ்பெற்ற இரட்டையர்களாக விளங்கியவருள் ஒருவருமான டாக்டர் ஆர்க்காடு இலட்சுமணசுவாமி முதலியார் அவர்கள், கடந்த 15—4—74 இல் தமது 86 ஆவது அகவையில் காலமானார்கள் என்ற செய்தி கேட்டு ஆற்றொணுத் துயரெய்துகின்றோம்.

திரு முதலியார் அவர்கள் பொதுவாழ்வில் மூன்று துறைகளில் புகழ்பெற்று விளங்கினார். ஒன்று மருத்துவம், மற்றொன்று கல்வி, இன்னொன்று அரசியல். மருத்துவத்தில் மரபுமுறை ஆராய்ச்சியில் தலைசிறந்து விளங்கினார் அத்துறையில் இவரியற்றிய நூல்கள் பிற நாட்டாரும் விரும்பிப் படிக்கும் அளவுக்குச் சிறந்து விளங்குகின்றன. மகப்பேற்று மருத்துவம் (obsterity) மரபுமுறை (Gynaecology) ஆகிய துறைகளில் 1934 முதல் 1942 ஆம் ஆண்டுவரை சென்னை மருத்துவக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். தாய் சேய் மருத்துவமனைக் கண்காணிப்பாளராகப் பணியாற்றியுள்ளார். 1939 முதல் 1942 ஆம் ஆண்டுவரை சென்னை மருத்துவக் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றினார். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மருத்துவக் கல்லூரியில் முதல்வராக இடம்பெற்ற இந்தியர் திரு. முதலியார் அவர்களை என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

1923 இல் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சி மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற இவர், 1942 இல் துணை வேந்தராகித் தொடர்ந்து 1969 ஆம் ஆண்டுவரை அப்பதவியில் இருந்து அரிய பணிகள் ஆற்றினர். 1949-50 ஆம் ஆண்டுகளில் உலக நல்வாழ்வுத்துறை செயற்குழுவின் தலைவராக இருந்தார். 1961 இல் அனைத்துலக நல்வாழ்வுத்துறை இயக்கத்தின் (WHO) தலைவராகவே திகழ்ந்தார்.

மேலும் திரு. முதலியாரவர்கள் கல்வித் துறையிலும், தொழில் நுட்பக் கல்வித் துறையிலும் பல பதவிகளைப் பெற்றார். 1963 ஆம் ஆண்டில் இந்திய அரசு இவருக்கு 'பத்மவிபூடணம்' என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது.

1946 முதல் 1968 வரை தமிழகச் சட்டமன்ற மேலவையில் எதிர்க் கட்சித் தலைவராக விருந்து இவராற்றிய உரைகள் போற்றுதற்குரியன. தமிழக அரசினரால் அமைக்கப்பட்ட மாநிலத் தன்னாட்சி பற்றிய இராஜமன்னார் குழுவில் ஓர் உறுப்பினராக இருந்தார்.

திரு டாக்டர் ஆ. இராமசாமி முதலியார் அவர்களும் டாக்டர் ஆ. இலட்சுமணசாமி முதலியார் அவர்களும் இரட்டையர்களாகப் புகழ்பட வாழ்ந்தார்கள். திரு. இலட்சுமணசுவாமி முதலியாரவர்கள் மறைவு குறித்து, திரு. இராமசாமி முதலியாரவர்கள், "இதுவரையில் பிரியாமல் இருந்தோம்; இன்று பிரிந்து விட்டோம்" என்று கண்களில் நீர் மல்க, உடன்பிறப் புணர்வு உண்ணின்று உந்த, தமிழக முதல்வர் அவர்

களிடம் கூறியதாக வந்துள்ள செய்தியைப் படிக்கும்போது படிப்போர் உள்ளம் நெகிழும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய சிறப்பு மிக்க டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களின் பிரிவு தமிழகக் கல்வித்துறை, மருத்துவத்துறை, அரசியல்துறை ஆகிய முத்துறைகளுக்குப் பேரிழப்பாகும்.

மறைந்த திரு. முதலியார் அவர்களின் குடும்பத்தார்க்கும் நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

# செய்திகளும் குறிப்புகளும்

## கோயில் நூலகத்திற்குத் திரு. பக்தவத்சலனார் நன்கொடை

தமது இல்லத்தில் தொகுத்து வைத்திருந்த 550க்கு மேற்பட்ட விலையுயர்ந்த சிறந்த புத்தகங்களை மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் நூலகத்திற்கு 28—4—74 இல், முன்னாள் தமிழக முதல்வர் திரு எம். பக்தவத்சலனார் அவர்கள் கோவில் ஆட்சிப் பொறுப்பாளர் திரு த. நாகராஜன் அவர்களிடம் நன்கொடையாக வழங்கினார். இப்புத்தகங்கள் அனைத்தும் சமய, இலக்கியப் புத்தகங்களாகும். தம் இல்லத்தில் இருப்பதைவிடத் திருக்கோயில் நூலகத்தில் இருக்குமாயின் பொதுமக்கள் பலருக்கும் பயன்படும் என்ற நன்னோக்கத்தோடு புத்தகங்களை வழங்கிய திரு. பக்தவத்சலனார் அவர்களைப் பொறுப்பாளர் பெரிதும் பாராட்டினார். நூலக உலகிற்குப் பெருநன்மை செய்த திரு. பக்தவத்சலனார் அவர்கட்கு நாமும் நம் வாழ்த்துக்களையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

## கல்லாமையை அகற்ற வழி

"மக்கள் முன்னேற்றமடைய அவர்கட்குக் கல்வி அளித்து அறியாமையைப் போக்க வேண்டும். இதற்குத் தனிப்பட்ட நிலையங்கள் முன் வந்து பணியாற்ற வேண்டும்." என்று 16-3-74 இல் புது தில்லியில் நடைபெற்ற நேரு கல்விப் பரிசளிப்பு விழாவில் பேசிய இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் திரு ஜி. எஸ். பதக் அவர்கள் கூறியுள்ளார். கல்லாமையைப் போக்க அரசு ஒன்றினால் மட்டும் இயலாது. திரு. பதக் அவர்கள் கூறியிருப்பதுபோல் பல்வேறு இயக்கங்களும் தம்மாலியன்ற அளவு கல்விப் பணியாற்ற வேண்டும். அத்துடன் அப்படிப்பட்ட இயக்கங்கட்கு அரசு பொருளாதார உதவி அளித்தலும் இன்றியமையாததாகும்.

## "எண்ணெய் விலையைக் குறைக்க மாட்டோம்"— ஈரான் நாட்டுத் தலைவர் ஷா அறிவிப்பு

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் செய்திக் குழுவொன்று அண்மையில் ஈரான் தலைவர் திரு ஷா அவர்களைக் கண்டுரையாடியபோது, "நீங்கள்

எண்ணெய் விலையைக் குறைக்க ஒருப்படுவீர்களா ?" என்று கேட்டனர். அதற்குத் திரு. ஷா "இல்லை; நாங்கள் ஏன் குறைக்க வேண்டும்? இன்னும் சொல்லப்போனால் மேலும் விலை ஏறுமே யொழியக் குறையாது. 3 கோடியே 20 லக்கம் மக்களை நாங்கள் காப்பாற்ற வேண்டியுள்ளது. இந்த விலை ஏற்றத்தினால்தான் அவர்களின் வாழ்க்கையை நாங்கள் முன்னேற்ற முடியும்" என்றார். அவர் மேலும் கூறியதாவது : "நாங்கள் வாங்கும் பொருள்களெல்லாம் விலை ஏறிக்கொண்டே போகும்போது நாங்கள்மட்டும் ஏன் குறைக்க வேண்டும்? நாங்கள் எங்கள் படை பலத்தைப் பெருக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். விரைவில் நாங்கள் உலகில் ஐந்தாவது படைபலம் பொருந்திய நாடாகத் திகழ்வோம்" என்றார்.

## மாநிலத் தன்னாட்சி

மாநிலங்கள் பொருளாதாரத் துறையில் முன்னேற வேண்டுமானால் மாநிலங்கட்குத் தற்போது நடுவண் அரசினால் வழங்கப்படும் அதிகாரங்கள் போதா. நடுவண் அரசில் அதிகாரங்கள் குவிந்து கிடப்பதால் மாநிலங்கள் சரியானபடி செயல்பட இயலாது என்பது மறைந்த அறிஞர் அண்ணா அவர்களின் கருத்தாகும். அவர் வழிவந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தற்போது அதனை வலியுறுத்தி வருவதோடு கடந்த சட்டமன்றத் தொடர் கூட்டத்தில் இதற்கென ஒரு தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றியுள்ளார். இது பற்றிய கருத்து வேற்றுமைகள் பல நிலவிய போதிலும் மாநிலங்கட்கு அதிக அதிகாரம் வேண்டுமென்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

## இந்தித் திணிப்புக்குப் பலகோடிப் பணம் பாழ் !

இந்திய நடுவண் அரசின் உள்துறை அண்மையில் மாநிலங்களுக்குச் சில ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. அதில் இந்தி மொழியை எவ்வளவு விரைவாகத் திணிக்கலாம் என்பதற்கு வழிவகைகள் காட்டப்பட்டுள்ளன.

"எல்லா அமைச்சகங்களும் தங்களால் வெளியிடப்படும் வெளியீடுகள் அனைத்திலும் இந்தி மொழியைப் புகுத்தவேண்டும். தொழில் நுணுக்கம், அறிவியல் தொடர்புடையவையாக இருந்தால் சில கட்டுரைகளேனும் இந்தியில் இருக்க வேண்டும்.

புள்ளிவிவர வெளியீடுகள் இருமொழிகளில் இருக்க வேண்டும், நாடாளுமன்ற சட்ட வரைவுகள் அனைத்தும் இந்தி மொழியிலேயே வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தந்தி கொடுப்பதற்கான சுருக்கச் சொற்கள் இந்தியிலேயே பதிவு செய்யப்பட வேண்டும். ஆங்கிலத்தில் உள்ள சட்டங்களை இந்தியாக்கம் செய்யும் பொறுப்பு ஆட்சி மொழிக்குழுவிடம் விடப்பட்டிருக்கிறது" என்று உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

இதற்கெல்லாம் கோடிக்கணக்கில் பணம் செலவிடப்படுகிறது என்பதைப் பொதுமக்கள் உணருவார்களாக.

## கல்வெட்டில் உமையம்மை வழிபாடு

கழகம் வெளியிட்டுள்ள உமையம்மை வழிபாடு மயிலைக் கற்பகாம்பிகை கோயிலில் சலவைக்கல்லில் அழகு முறையில்-எல்லாரும் பார்த்துப் படித்து மகிழும் வண்ணம் பொறிக்கப்பட்டிருப்பது கண்டு பெருமகிழ்ச்சி யடைகிறோம். வழிபாட்டுக்குரிய பாடல்கள் யாண்டும் பரவும் வகை செய்து வருகிறது கழகம் என்பதை அன்பர்கள் அறிவர். முன்னரே கழகம் வெளியிட்டுள்ள பிள்ளையார் வழிபாடு இசையரசி திருவாட்டி சீர்காமணி சீனிவாசன் அவர்களால் பாடப்பெற்று இசைத் தட்டாகப் பதிவு செய்யப் பெற்றிருப்பதை அன்பர்கள் அறிவர். இங்ஙனமே உமையம்மை வழிபாடும், முருகர் வழிபாடும் இசைத் தட்டுக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் இதுபோன்ற மலர் வழிபாட்டு நூல்களை அன்பர்கள் வாங்கிப் பயன் படுத்துதல் வேண்டும். அங்ஙனமே இசைத் தட்டுகளாகவும், கல்வெட்டுக்களாகவும் பரவி நிலைத்திருக்குமாறு செய்வது இறையன்பர்கள் கடமை யாகும்.

## நோய் தீர்க்கத் துணை செய்யும் பன்மொழி மருத்துவ நூல்

டாக்டர் சாமர்ஸ் பாரி என்னும் பிரித்தானிய மருத்துவர் ஒருவர் உலகிலுள்ள முக்கியமான 27 மொழிகளில் நோய்களைப் பற்றிய வினுக் களையும், அவற்றுக்குரிய விடைகளையும் தொகுத்து ஒரு நூலாக உருவாக்கி யுள்ளார். இதில் 193 வினுக்கள் அடங்கியுள்ளன. இந் நூலின் உதவியால் மருத்துவர்கள் சுருங்கிய காலத்தில் நோயாளிகளை ஆராய்ந்து நோயின் தன்மையை எளிதில் புரிந்து கொள்ளலாம். இதனுல் ஆய்வுக்குரிய நேரம் குறைகிறது.

இந் நூலின் துணைகொண்டு ஒரு பிரித்தானிய மருத்துவர் பல்கேரிய நோயாளிக்கும், டச்சு மருத்துவர் சப்பானிய நோயாளிக்கும் ஓர் அராபிய மருத்துவர் நார்வேஜிய நோயாளிக்கும் இதுபோல் பல்வேறு மொழி யினர்க்கும் எளிதில் மருத்துவம் செய்ய முடியும். இந்த நூலின் பெயர் "Polyglot Medical Questionaire-A Digital System af Communication" என்பதாகும்.

## இந்திக்குச் சலுகை தந்திடுவார்...

நடுவண அரசின் இந்தி ஆதிக்கத்தைப் பரப்பத் தமிழகத்திலும் சில ஐந்தாம் படையினர் உளர் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் தமிழகச் சட்டமன்ற முன்னுள் துணைத்தலைவர் ஒருவர் இந்தி எதிர்ப் பால் தமிழக நலம் கெட்டுவிட்டது என்றும், இனியேனும் இந்தியின் முதன்மையை உணர்ந்து அதனை மாணவர்கள் பயிலவேண்டும் என்றும் அண்மையில் பேசியிருக்கிருர். அதனைச் சிலர் பாராட்டவும் செய் கின்றனர்.

நடுவணஅரசு போகிற போக்கைப் பார்த்தால் இந்தியைக் கொண்டே இந்தி பேசாத மக்களை அடிமை கொண்டு விடலாம் என்ற பான்மையில் வேலைகள் நடைபெற்று வருகின்றன என்று கூறலாம். இந்தி பிற மாநில மக்களை அடிமையாக்காதபடி எதிர்ப்பதுதான் இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் குறிக்கோள்.

## ஆர். வி. கிருட்டிண ஐயர் பிரிவு

1974 மே 5 ஆம் நாள் இரவு மதிப்புமிக்க திரு. ஆர். வி. கிருட்டிண ஐயர் எம்.ஏ., பி.எல். தமது 90 ஆவது அகவையில் திருமயிலையில் தமது இல்லத்தில் இறையடி சேர்ந்தனர். தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை திரு ஆர். வி. அவர்களோடு சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் பயின்று தமிழில் எம். ஏ. பட்டம் பெற்றனர்.

இவ்விருவரும் மறைமலையடிகளிடத்தில் தமிழ் பயின்றவர்கள் என்பது மகிழ்தற்குரியது. இவ்விருவரும் தமிழில் திறமை மிகுந்தவர் களாய் ஒரே மதிப்பெண் பெற்றவர்களாயிருந்த போதிலும் அவர் தம் ஆசிரியர் பரிதிமாற் கலைஞர் தணிகைமணியவர்கட்கே பரிசு வழங்குமாறு பரிந்துரைத்தனராம்.

உயர்திரு கிருட்டிண ஐயரவர்கள் மாவட்ட உதவி நடுவராகவும், சட்டப்பேரவைச் செயலராகவும் இருந்து அத்துறைகளில் பெருமதிப் பினைப் பெற்றுள்ளனர். மறைமலையடிகள் நூல் நிலையத்தைப் பார்வை யிட்டுப் பாராட்டியுள்ளனர். கழக நூல்கள் சிலவற்றிற்கு 'மெயில்' இதழில் அவர்கள் எழுதிய மதிப்புரைகள் பெரிதும் போற்றுதற் குரியன.

கழகத்தின் பதிப்புத் துறையினைப் பெரிதும் போற்றிவந்த தமிழ்ப் பேரறிஞர் ஒருவரை இழந்தமை குறித்துக் கழகம் இறுதி வணக்கம் தெரிவித்துத் தமது ஆறுதலை அவர்கள் உற்றார் உறவினர்கட்குத் தெரிவித்துக் கொள்கிறது.

## தமிழ்ப்பேரறிஞர், முதுபெரும்புலவர் எஸ். எஸ். அருணகிரி மறைவு

சென்னை, தொண்டைமண்டலம் துளுவவேளாளர் உயர்நிலை பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராய் இருந்தவரும், பல தமிழ் நூல் களின் ஆசிரியரும், இந்தி மறுப்புப் போராட்டங்களை நடத்தத் துணை நின்றவரும் நீதிக்கட்சித் தூண்களில் ஒருவராய் நின்று தமிழ்நாட்டு முன்னேற்றத்துக்குப் பாடுபட்டவரும், பேராசிரியர் கா. நமச்சிவாயர், முத்தமிழ்க் காவலர் மயிலை சிவமுத்து முதலிய சான்றோர்களின் உடன் பிறவாத் தோழரும், அஞ்சா நெஞ்சினரும், ஆகிய தமிழ்ப்பேரறிஞர் எஸ். எஸ். அருணகிரிநாதர் அவர்கள் காஞ்சிபுரத்தை அடுத்த வயலக் காவூரின்கண் தம் இல்லத்தில் 79 ஆம் அகவையில் 17—4—74 அன்று இரவு காலமானார்கள் என்பது அறிந்து வருந்துகின்றோம். அவர்தம் உயிர் இறைவன் நல்லருளுக்கு இடமாகி அமைதி யடைய இறைவனை இறைஞ்சுகின்றோம். அவர்தம் மைந்தர் இருவருக்கும், அவர் குடும்பத் தாருக்கும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்திற்காக
சென்னை 600001, 2-140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில்
திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.

# கழகப் புதிய வெளியீடுகள்

## VOICE OF VALLALAR

By Rao Sahib S R. V. Arasu, B A.

வள்ளலார் இராமலிங்க அடிகள் சாதி வேறுபாடுகளற்ற சமநிலை சமுதாயத்தை அமைக்கவும், நாட்டு மக்களிடையே காணப்படும் வறுமை அறியாமை ஆகியவற்றை அகற்றவும் பாடுபட்டார். வள்ளலாரின் இவ்அரும்பணிகளை அவர்தம் திருவருட்பாப் பாடல்களினின்றே எடுத்துக்காட்டுகிறது இந்நூல். அனைத்துலகும் வள்ளலார் குரல் கேட்டு உய்யும் வண்ணம் இந்நூல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. அறிஞர் ராவ் சாகிப் நல் முருகேச முதலியார் அவர்களின் சீரிய முன்னுரையுடன் கூடிய அரிய நூல். 5 00

## கிறக்கும் உச்சி (Withering Height)

*மூலம் : எமிலி ஜேன் பிராண்டி*

*சுருக்கத் தமிழாக்கம் : கு. பரமசிவன், எம்.ஏ.*

இக் கதை மேலைநாட்டுச் சூழலில் அமைந்துள்ள ஒரு குடும்பக் கதையாகும். ஒரு வேலைக்காரி கதையைக் கூறும் முறையில் இஃது அமைந்துள்ளது இனிய கதை. நல்ல தமிழில், படங்களுடன் கூடிய அழகிய பதிப்பாக வெளிவந்துள்ளது. ரூ. 6-00

## கழகவழி வெளிவந்த பாவாணர் நூல்கள்

| | | |
|---|---|---|
| பழந்தமிழாட்சி | 4 | 00 |
| சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் | 3 | 50 |
| திரவிடத்தாய் | 3 | 00 |
| ஒப்பியன் மொழிநூல் | 12 | 50 |
| வேர்ச்சொற் கட்டுரைகள் | 10 | 00 |
| கட்டுரை வரைவியல் | 3 | 00 |
| உயர்தரக்கட்டுரை இலக்கணம் II | 3 | 50 |
| முதல்தாய்மொழி | (அச்சில்) | |

### சொந்த வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| தமிழர்மதம் | 7 | 50 |
| தமிழ் வரலாறு | 6 | 25 |
| தமிழர் வரலாறு | 12 | 50 |
| வடமொழி வரலாறு | 7 | 50 |
| பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும் | 6 | 25 |
| இசைத் தமிழ்க் கலம்பகம் | 3 | 00 |
| இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்? | 1 | 25 |
| The Language Problem of Tamilnad & its Logical Solution | 2 | 00 |

பதிவு எண் : M 4899

# பிற பதிப்பாளரின் வெளியீடுகள்


| | | |
|---|---|---|
| தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள் —டாக்டர் இரா. தண்டாயுதம் | 5 | 50 |
| தற்காலத் தமிழ் இலக்கியம் —டாக்டர் இரா. தண்டாயுதம் | 4 | 50 |
| விநாயகர்—கிருபானந்தவாரியார் | 0 | 50 |
| நிலா நானூறு —கவிஞர் ஆற்றலரசு | 2 | 50 |
| எங்கே போகிறோம்—அகிலன் | 7 | 50 |
| ஆறுகள்—தொகுப்பாசிரியர், மா. வே. பசுபதி | 3 | 00 |
| இரத்தத்தில் 50 நாட்கள்—அ. இராமசாமி | 12 | 00 |
| பல்கலைப் பழந்தமிழ்—டாக்டர் ந. சஞ்சீவி | 15 | 00 |
| இந்திய விடுதலையும் தமிழியக்கமும் ,, | 20 | 00 |
| புதிய ஜெர்மனியில்—நெ. து. சுந்தரவடிவேலு | 3 | 00 |
| இலக்கியத்தில் காதல்— கண்ணதாசன் | 4 | 50 |
| கீதையின் சாரம்—சம்பந்தம் | 2 | 50 |
| குழந்தைகள் கலைக்களஞ்சியம் 7 ஆவது பாகம் | 10 | 00 |
| வள்ளலார் கண்ட ஒருமை வாழ்வு—சரவணானந்தா | 3 | 00 |
| கம்பனும் மில்டனும்—எஸ். இராமகிருஷ்ணன் | 4 | 75 |
| இராஜநாயகம்—வண்ணக்களஞ்சியப்புலவர் | 10 | 00 |
| எட்டுத் தொகைச் செல்வம் —லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் | 6 | 00 |
| ஏழு பிறப்பு?— புலவர் மு. தெய்வநாயகம் | 2 | 50 |
| திருவள்ளுவர் கூறும் மூவர் யார் ? | 2 | 50 |
| சான்றோர் யார் ? | 5 | 00 |
| திருமுருகாற்றுப்படை விளக்கம் —கி. வா ஜகந்நாதன் | 8 | 00 |
| திருவள்ளுவர் போற்றும் அருட்செல்வம் யாது ? | 2 | 50 |
| First All India Tirukkural Seminar Paper —Dr. N. Sanjeevi | 10 | 00 |
| A History of Sanskrit Literature —Arthur A. Macdonell | 10 | 00 |